Then, there is one other thing about this Kerala water. We ask them for their waters, but we would not give them paddy and we would stop the paddy going to Kerala. It is often said that this whole country should be one unit, with South Zone and things like that. Even if you cannot give them paddy, you should at least give them rice. How can we expect them to give us their waters without ourselves giving them food? How is it possible to get

11th March 1959] [Sri L. S. Karayalar]

their waters? You cannot ask them for this and then deny them that. Therefore, my appeal to the Government is that in the interest of this State as well as in the interest of the Kerala State, there should be a comprehensive scheme under which both the States would be benefited, we getting their waters and they getting our food. Then the problem could be solved.

Then, Sir, there are hundreds and thousands of people coming into this State from Ceylon. I know the Hon. the Leader of the House would look up and say that it is not a State subject. Though the subject may not be a State subject, the people are subjects of the State. This point has been raised time and again on the floor of the other House and hundreds of questions have been asked. Probably the Hon. the Leader of the House is aware and I am sure he is fully aware that people who have migrated largely belong to this State. If they are some three million people outside India, two million of them are Tamilians and half of them would come from the island of Ceylon. If to-day the country of Ceylon is rich, if she is luscious and prosperous, it is due to the sweat of Indian labour. Indians had been working on the various estates to enrich that country. Those same people are to-day neither here nor there. They are Stateless there and they are Stateless here and they are Stateless everywhere. Therefore, the Government should take this matter up seriously and not brush it aside lightly, for this matter concerns this State alone and this State largely.

Sir, I have read in the papers the appeal of Srimathi Indira Gandhi for co-operation from all people, especially people who had left the Congress. In his Budget speech, the Hon. the Finance Minister wants that there should be co-operation from all sides. Co-operation is there, especially for all constructive work. It is not difficult to co-operate, especially in matters in which agreement could be brought about and in which, of course, the basic ideals are the same and those which could be agreed upon. They ask for co-operation. Well, what happens in this State? I know the Party to which I belong works at grass root level and I would like hon. Members to note that my Party sitting in the Opposition here is the only Party working at grass root level and having contact and association with the masses of the people of this country. . .. (Laughter.)

SRI V. K. PALANISWAMY GOUNDER : He is requested to come back.

* SRI L. S. KARAYALAR : Thank you very much for the invitation, but I am not able to accept it. (Interruption) To the request for co-operation and invitation to come back, I am replying.

Then, when the Hon. Ministers go on tour—I wish them all happy travel; let them go about, see things, come into contact with the masses of this country, see them, hear them, speak to them and act up to their wants; that is all all right in a democratic set-up and it should be done—what happens? In my district of Tirunelveli, the manager of the Democratic Party which is 3-10 p.m.

[Sri L. S. Karayalar] [11th March 1959

running the Tirunelveli branch, has gone to prison seven times. Whenever a Minister comes, he is kept in prison for two or three days and then as soon as the Minister is gone, he is brought back. This has been going on. Is this the way of extending the hand of co-operation? Co-operation is not one-way traffic. I have to give, if need be, and you have also to give. If you yield, I too yield. But if you resist, I will also resist. That way co-operation could not work. Added to that, there are good measures, measures for the benefit of this country and measures enacted to bring good to the people of this country. In all these, I am prepared to meet you half way and I would even travel an extra mile with you. But your hand of co-operation should be genuine, should be real and well-intentioned and not artificial.

SRI A. M. ALLAPICHAI : Why should the hon. Member question anybody?

* SRI L. S. KARAYALAR : I am not questioning the hon. the Deputy Chairman at all. Sir, one other point and it concerns the students. The hon. Member Dr. A. Lakshmanaswami Mudaliar concentrated himself mainly on matters, medical and others and he did not come up to the department of education at all. This is one matter which has been agitating the students who are going to sit for the examination in a few days—I hope it is on the 17th of this month. Recently there was a writ petition filed in the High Court asking the Director of Public Instruction as well as the Government to withdraw a certain book—Quentin Durward—saying that it was full of mistakes and that it would not be teaching English if that book was allowed for the examination. The High Court Judge had to make some caustic remarks. You will, Mr. Chairman, allow me to read a few excerpts from the judgment. I will not be long. He says, Sir, about this book. . .

* THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Chairman, I want to know the purport of the point. Is it that the particular individual was favoured or is it that the Government deliberately asked a person who was not competent to write the book to write it or is it that in such things Government should be more careful? We should like to know the nature of the charge that is sought to be levelled against the Government.

* SRI L. S. KARAYALAR : I would call for patience on the part of the Hon. the Leader of the House. I was coming to that and if he had waited and not butted in, I would have come to my constructive criticism and I would have told him how the system had failed and what should be done to remedy it. I shall come to that later. Referring to the book itself, His Lordship observed that the book, an abridged version, was printed on behalf of the Madras Government, and that the Department of Public Instruction had published it. " It is claimed that the language of the
3–10 p.m. abridged book is also English. The Education Department of the Madras Government has not merely recognized this claim, but marked its approbation of the work by prescribing it for the study

11th March 1959] [Sri L. S. Karayalar]

of the boys and girls for the S.S.L.C. Examination." Proceeding, His Lordship stated that in the hands of a resourceful teacher, it could be put to admirable use, he could take the original work of Sir Walter Scott and the abridged work and by contrasting the two explain to the students how English should not be written. " If such had been the intention of the authorities, they could not have made a more admirable choice." The book, Sir, is full of mistakes, badly written and badly printed.

Then, the judgment goes on to say something about publishing and prescribing test-books. His Lordship dismissed the petition, of course. He has stated that the present attempt of the Government to produce a text-book in English for non-detailed study " has not been a notable success. One becomes less ready than before, to condemn, as proceeding from a purely conservative attitude of mind, the view that matters of this nature are best left to private initiative and private endeavour ". Sir, I am not at all talking about it. It is beside the point. It is His Lordship's *obiter dictum* which has nothing to do with the main judgment itself which he has passed. But it is admitted on all sides that this book is badly printed and badly prescribed and everything is bad about it. The book was published in August whereas it should have been ready by June. Then, the Government issued an erratum, a pamphlet, correcting these mistakes, some time in October or November. It also contained a few mistakes, I am told, and then they issued another version of the book free from mistakes. By that time it was January. The students have got to appear for the examination in March. How did this happen? That is the point where the Leader of the House interrupted me. What is the system by which these books are written? I am not against nationalization of publication of text-books. Nobody need make that mistake. I am for nationalization of publication of text-books and it should be done on a proper basis. A sister State has nationalized the publication of text-bookks and readers. Then, Sir, by the time the text-books were presented to the Government and the Government examined them, they came to the market. Some 15,000 copies of the book were sold in the blalck market. It should not happen like that. There should be a sufficient time-lag before the text-books are prescribed. In this particular case, I am told, the edited copy of the manuscript has not yet been received by the Director of Public Instruction or by the Secretariat. What you should do is this. You should give sufficient time for publication of text-books. It is not choosing qualified men alone that counts. It is competency in choosing writers for these books that counts. I am not finding fault with the Director of Public Instruction. He is to-day a controversial figure. He is more sinned against than sinning. I am not finding fault with the Education Minister, I am not finding fault with the Government. The system is absolutely bad. You should give these people sufficient time. You should choose competent people. It is not only qualified people that count. That you should give a chance to everybody is not correct. That

last year this man was given a chance and that this year some other man should be given a chance is not correct. It is not a puppet-show or cinema show in which everybody should be given a chance.

THE HON. SRI R. VENKATARAMAN : The same author had written two books before. They had been approved and found to be very satisfactory.

* SRI L. S. KARAYALAR : I do not want to go into details in respect of that matter. I know how this author was preferred and under what rule it was approved. I do not want to go into the departmental, Secretariat or Ministerial level. That would be too much for me and too much for the Leader of the House too. But what I would like to ask is whether this edited manuscript copy has ever been seen by anybody except the author. Nobody saw it. How did so many mistakes come to be committed? My suggestion is this. Long before the books are to be published, give them sufficient time. Then choose the proper man, the most competent man, to write.

SRI MOHAMED RAZA KHAN : May I interrupt the hon. Member? The Leader of the House made the important point that the author was in the habit of writing good books and that only recently he developed a bad habit. (Laughter.)

(Vidwan T. Muthukannappan rose . . .)

MR. CHAIRMAN : No interruption please.

* SRI L. S. KARAYALAR : I like interruption, Sir. So, that is my suggestion as far as remedying this state of affairs is concerned. Sufficient time should be given. A competent writer should be chosen to write the book and edit it at the manuscript stage. Then proper quality and quantity of paper should be given. In the case of this particular book, I understand that the paper of the quality on which it was to be printed was not available at the last stage and that somehow the printer was asked to get some paper so that the students might have the text-book. All these things have got to be done sufficiently in advance. But I do not want to apportion the blame as such. However, I thought any Government should take a moral responsibility for this. I thought the whole Government were docile on this issue.

DR. A. SREENIVASAN : Everybody responsible for it should resign.

* SRI L. S. KARAYALAR : Every Minister is not possessed with the timbre of Shri Lal Bahadur Sastri. Some accident occurred in Hyderabad and he said that he was morally responsible for that accident.

SRI P. T. RAJAN : He joined the Government again.

* SRI L. S. KARAYALAR : That does not matter. Even if this Ministry resigns, it will be elected again. There is no doubt

11th March 1959] [Sri L. S. Karayalar]

about it. But I thought this Government should take a moral responsibility for the ruination of a whole generation of students. That responsibility is theirs and they cannot escape it. I know probably that they do not want to take even a moral responsibility for that. But there is a day of judgment. All of us will have to stand before God and then there is the day of reckoning when God sitting on His ivory Throne will ask these Ministers, "Are you not responsible for the ruination of a whole generation of students?"

SRI A. GAJAPATHY NAYAGAR : That is a vicarious liability.

* SRI L. S. KARAYALAR : I shall picture these Ministers.

SRI MOHAMED RAZA KHAN : Our Deputy Chairman will defend them.

* SRI L. S. KARAYALAR : They will have to bow their heads in shame. I shall only pray to the all-beneficent God—my prayer may go forth to Him—to have mercy on them for nothing else will save them.

SRI V. K. PALANISWAMY GOUNDER : கனம் தலைவர் அவர்களே, நண்பர் ஸ்ரீ கரையாளர் பேசிய பிறகு நான் பேசுகிறேன். காங்கிரஸ் தலைவர், கட்சியிலிருந்து பிரிந்து போனவர்களைத் திரும்பவும் வந்து சேரும்படி கூப்பிட்டார்கள் என்று அவர்கள் சொன்னார்கள். அதை அவர் இங்கே பிரஸ்தாபித்ததால் இங்கே இருக்கிற கட்சித் தலைவர் அவரைக் கூப்பிட்டால் ஸ்ரீ கரையாளர் அவர்கள் மனமுவந்து வருவார்கள் என்று நான் நினைக்கிறேன். (டாக்டர் ஏ. ஸ்ரீநிவாசன் : அவர் வரலாம்.) (ஸ்ரீ ஏ. எம். அல்லாபிச்சை : உங்களுக்குக் கஷ்டமாக இருக்கப் போகிறது.) இங்கே ராஜ்யத்தில் இருக்கக்கூடிய கட்சித் தலைவராகக் கூட அவரைக் கூப்பிடுவார்கள். அதனால் அவரை மனமுவந்து திரும்பி வரும்படியாகவும் கேட்டுக்கொள்ளுகிறேன். தமிழ் நாட்டின் காங்கிரஸ் கமிட்டியின் தலைவராகக் கூட அவர் இருந்திருக்கிறார். இப்பொழுது துரதிருஷ்டவசமாக அவர் அங்கே இருக்கிறார். தனிக் கட்சியில் ஒருவராக இருக்கிறார். அவரைத் திரும்பவும் இங்கே வரும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

SRI L. S. KARAYALAR : That does not matter. The Y.M.C.A. was started by four people.

SRI V. K. PALANISWAMY GOUNDER : தலைவர் அவர்களே, 3-20
இந்த வரவு செலவுத் திட்டத்தை எதிர்க் கட்சிக்காரர்கள் உட்பட எல்லோரும் p.m.
பாராட்டுகிறார்கள். பாராட்டாமல் இருக்க முடியாது. அவ்வளவு நன்றாகத் தயாரிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டம் இது.

இப்பொழுது கல்விச் சலுகைகள் ஜாதி அடிப்படையில் கொடுக்கப்பட்டிருக்கின்றன. கல்விச் சலுகைகளையும் மற்றச் சலுகைகளையும் ஜாதி அடிப்படையில் கொடுப்பது சரியல்ல என்று நான் சென்ற வருஷத்திலும் சொன்னேன். இப்பொழுதும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எல்லா ஜாதிகளிலும் மிக்க ஏழைகள் இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் இந்தச் சலுகைகள் கொடுக்கப்படுவதில்லை. ஒரு சில ஜாதியாரைத் தவிர மற்றவர்கள் ஏழைகளாக இருந்தபோதிலும் கூட அவர்களுக்கு இந்தச் சலுகைகள் கொடுக்கப்படுவதில்லை. தாழ்த்தப்பட்டவர்கள் என்பதற்காக மற்றச் சலுகைகளைக் கொடுக்கட்டும். அது சரியல்ல என்று சொல்லவில்லை. கல்விச் சலுகை மேல் ஜாதி என்று சொல்லப்படுகிறவர்களுக்குக் கொடுக்காமல் இருப்பது சரியல்ல. அவர்களில் கூட பரம ஏழைகள் இருக்கிறார்கள். அவர்களுக்குச் சலுகைகள் கொடுப்பதில்லை.

[Sri V. K. Palaniswamy Gounder] [11th March 1959

இப்பொழுது அரசாங்கம் தன் உத்தியோகஸ்தர்களுக்கு, என்.ஜி.ஓக்களுக்கு, ஸ்தல ஸ்தாபனத்தில் இருக்கிறவர்களுக்கு—கிராம உத்தியோகஸ்தர் களுக்குக் கூட இந்த வருஷத்தில்—சலுகைகள் எல்லாம் கொடுத்திருக்கிறது. நாட்டில் இருக்கக்கூடிய எல்லா ஜாதிக்காரர்களிலும் ஏழைகளாக இருக்கக் கூடியவர்களுக்கு என் இந்தச் சலுகைகளைக் கொடுக்கக் கூடாது என்று நான் இந்த அரசாங்கத்தைக் கேட்க விரும்புகிறேன். பணக்காரர்களாக இருந்தால், சலுகைகள் கொடுக்க வேண்டாம். ஆனால், ஏழைகளாக இருக்கிறவர்களுக்குச் சலுகைகளைக் கொடுக்காமல் இருப்பது அரசாங்கம் செய்கிற ஓர வஞ்சனை என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே, இந்தச் சலுகைகளை ஏழைகளாக இருக்கக்கூடியவர்கள் எந்த ஜாதியினராக இருந்தாலும் கொடுக்கவேண்டுமென்று வற்புறுத்திச் சொல்ல ஆசைப் படுகிறேன்.

கோவை ஜில்லாவில் பல ஆலைகள் இருக்கின்றன. 40, 50 ஆலைகள் இருக்கின்றன. என்ஜினியரிங் ஆலைகள் இருக்கின்றன. இப்பொழுது "ஸ்லம் கிளியரன்சுக்காக" கார்ப்பரேஷனுக்கு அரசாங்கம் ஒத்தாசை செய்து வருகிறது. இந்த வருஷ வரவு செலவுத் திட்டத்தில் மற்றப் பெரிய நகரங் களுக்கும் கூட இந்தச் சலுகைகளை விஸ்தரித்திருக்கிறார்கள். ஆனால், இந்த மில்களுக்கு முன்னால் புதிய புதிய "ஸ்லம்கள்" ஏற்பட்டுக் கொண் டிருக்கின்றன என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். கோவையில் ஒரு ஆலையை ஏதோ கிராமத்திற்குப் பக்கத்தில் ஆரம்பிக்கிறார்கள். ஆனால் ஆறு மாதம் ஒரு வருஷத்திற்குள்ளாகச் சுற்றிலும் பல வீடுகள் அமைகின்றன. ரோடு கிடையாது. சந்துகள் கூடக் கிடையாது. "ஸ்லம் கள்" புதிது புதிதாக ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. பழைய ஸ்லம்களை ஒழிக்க அரசாங்கம் பணம் செலவு செய்து வருகிறது. ஆனால், புதிதாக இந்தமாதிரி ஸ்லம்கள் ஒரு பக்கத்தில் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. இந்த ஸ்லம்களைத் தடுக்க வேண்டியது மிகவும் அவசியம். கொஞ்சம் அரசாங்கம் முயற்சி செய்தால், நன்றாக அந்த வீடுகளைக் கட்டிக் கொடுக்க முடியும். அதற்கு அரசாங்கம் உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

சமீபத்தில் பஞ்சாயத்து யூனியன் சட்டம் நிறைவேற்றப்பட்டது. அது இன்னும் அமுலுக்குக் கொண்டுவரப்படவில்லை. ஜில்லா போர்டு அந்த வேலைகளை செய்து வருகிறது. ஜில்லா போர்டு இப்பொழுது கலெக்டர் வசத்தில் இருப்பதால், அக்கறை இருப்பதில்லை. கலெக்டரை ஏதாவது காரியங்களை ஏன் செய்யவில்லை என்று கேட்டால், "நாங்கள் 'கேர்–டேக்கர்' நிர்வாகத் தில் இருக்கிறோம். அதனால் அதை எல்லாம் செய்வதற்குத் தகுதி இல்லை. பின்னால் திறமையான ஸ்தாபனம் வந்த பிற்பாடு செய்துகொள்ளலாம்" என்று சொல்லிவிடுகிறார். பல இடங்களில் பல வேலைகள் துவக்கப்பட விருக்கின்றன. இந்தப் பஞ்சாயத்து யூனியன் சட்டத்தை உடனே அமுலுக்குக் கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

எங்கள் ஜில்லாவில் ஆழியாறு என்று ஒரு ஆறு இருக்கிறது. அதற்குப் பக்கத்தில் பல பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. டவுன் பஞ்சாயத்து இருக் கிறது. ஆழியாறு 'பேசினில்' பல பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. அங்கெல்லாம் கூட குடி தண்ணீர் வசதி கிடையாது. நல்ல குடி தண்ணீர் வசதி செய்யாவிட்டால், அடிக்கடி காலரா போன்ற நோய்கள் வருகின்றன என்று பல தடவை சொல்லியிருக்கிறேன். நம்முடைய சுகாதார மந்திரி அவர்கள் சில ஜில்லாக்களுக்கு மாத்திரம் அந்தச் சலுகைகளை விஸ்தரித் திருப்பதாகச் சொன்னார்கள். ஆற்றுப் பக்கத்தில் இருக்கிற பெரிய கிராமங்களுக்கு, காலரா வருகிற இடங்களுக்கு இந்தச் சலுகை கொடுக்கப் பட்டிருக்கிறது. அது போல் எல்லா ஜில்லாக்களிலும் ஆற்றுப் பக்கத்தில் இந்த நிலைமை இருக்கக்கூடிய இடங்களுக்கு எல்லாப் பஞ்சாயத்துக் களுக்கும் விஸ்தரிப்பதன் மூலம் அங்குள்ள மக்களுக்குக் காலரா போன்ற நோய்கள் வராமல் இருக்கும். பக்கத்துக் கிராமங்களில் தொத்து நோய் வருகிறது. ஆகவே, இதை எல்லா ஜில்லாக்களுக்கும், குறிப்பாக ஆழியாறு பேசினில் இருக்கிற பஞ்சாயத்துக்களுக்கும் விஸ்தரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

11th March 1959] [Sri V. K.Palaniswamy Gounder]

திருநெல்வேலி, ராமநாதபுரம் ஜில்லாக்களில் மாத்திரம் பஞ்சம் என்று சொல்லுகிறார்கள். கோவை ஜில்லாவில் கூட இந்த வருஷம் பருவ மழை கெட்டுவிட்டது. வட கிழக்குப் பருவ மழை இல்லாமல், உடுமலைப்பேட்டை, பொள்ளாச்சி தாலுகாவில் ஒரு பகுதி ஆகியவைகளில் பஞ்ச நிலைமை இருக்கின்றது. அரசாங்கம் இதைப்பற்றிக் கவனித்துக் காரியமாற்ற வேண்டு மென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

வைத்திய வசதியைப்பற்றி இந்தச் சபையில் பல பேர் பேசினார்கள். அதில் நன்றாகத் தேர்ந்த நிபுணர்கள் பேசினார்கள். என்ன பேசியும் மந்திரி அவர்கள் சென்ற வருஷத்தை விட அதிகமாக இந்த வருஷம் செலவிடப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். செலவிடப்பட்டிருக்கலாம். ஆனால் நிலைமை என்ன ? வைத்திய வசதி நகரங்களில் இருக்கிறதே ஒழிய, கிராமங்களில் இல்லை. கிராமங்களில் உள்ள அரசாங்க ஆஸ்பத்திரி களில் பல இடங்களில் டாக்டர்கள் இல்லையென்று சொன்னார்கள். அரசாங்க ஆஸ்பத்திரிகள் கொஞ்சம்தான் இருக்கின்றன. ஸ்தல ஸ்தாபன ஆஸ்பத்திரிகள் நிறைய இருக்கின்றன. அங்கே டாக்டர்கள் இல்லை. அதனால் அந்த ஆஸ்பத்திரிகள் மூடப்பட்டிருக்கின்றன. இதற்கு அரசாங்கம் ஏதாவது வழி செய்தாக வேண்டும். டாக்டர் இல்லையென்று சொல்லிக் கொண்டிருந்தால், போதாது. கிராமங்களுக்கு வைத்திய வசதியைச் செய்து கொடுப்பது அரசாங்கத்தின் கடமை. இப்பொழுது ஜி.சி.ஐ.எம்.-இல் படிப்பவர்கள் படிப்பு முடிந்தவுடன் கிராமங்களுக்குப் போய் டாக்டர் களாகப் பணியாற்றுவார்கள் என்று எதிர்பார்த்தார்கள். அவர்கள் சென்றார்களா ? அவர்கள் போவதில்லை. எல். எம். பி. கோர்சை அரசாங்கம் எடுத்தது தவறு என்று நான் நினைக்கிறேன். இப்பொழுது பெரிய படிப்பாக எம்.பி.பி.எஸ். மட்டுந்தான் இருக்கிறது. அது மாத்திர மல்ல. ஆயுர்வேத, சித்த, யுனானி வைத்தியத்தில் எல்.ஐ.எம். என்ற ஒரு சிறு கோர்ஸ் இருந்து வந்தது. அதையும் எடுத்துவிட்டு, ஜி.சி.ஐ.எம். என்று வைத்தார்கள். இப்படி எடுத்தது கிராமங்களுக்கு வைத்திய வசதியே இல்லாமல் செய்துவிட்டது.

THE HON. SRI R. VENKATARAMAN : அதைப்பற்றி மாணவர் களே கிளர்ச்சி நடத்தியது கனம் அங்கத்தினருக்குத் தெரியும் என்று நினைக்கிறேன். "குறைவான படிப்பு எங்களுக்கு வேண்டாம். எங்களுக்கு எம்.பி.பி.எஸ். படிப்புத்தான் வேண்டும்" என்று மாணவர்களே கிளர்ச்சி செய்த காரணத்தினால், ஓரளவு அது அவர்களுக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது. 3-30 p.m.

SRI V. K. PALANISWAMY GOUNDER : அது தெரியும். அங்கே இருக்கிற பிள்ளைகள் கிளர்ச்சி செய்தார்கள் என்பதற்காக அரசாங்கம் அதற்குப் பயந்து கூடாது என்று செய்வது சரியல்ல. பொது மக்களுக்கு எப்படியோ அரசாங்கம் வைத்திய வசதியைச் செய்து கொடுத்தாக வேண்டும். முன்னால் வீட்டிலேயே சில வைத்தியங்கள் செய்துகொண்டிருந் தார்கள். அவை எல்லாம் இப்போது மறந்துபோய்விட்டன. ஒருவருக்கும் தெரிவதில்லை. தெரிந்தாலும் அதில் நம்பிக்கையும் இல்லாமல் போய்விட்டது. அதிகம் செலவாகக்கூடிய வைத்தியம்தான் வேண்டும் என்று நினைத்து—கடைசியில் கிராமங்களில் உள்ள மக்கள் வைத்திய வசதி யின்றியே கஷ்டப்படுகிறார்கள். எல்.ஐ.எம். கோர்ஸ் இருந்தாலும், சில கிராமங்களுக்கு ஓரளவாவது இந்த வசதி இருந்திருக்கும். இப்போது அதுவுமின்றி, இதுவுமின்றி இரண்டுங்கெட்டானாக இருக்கிறதென்று சொல்ல வேண்டும்.

ஆயுர்வேதம், யுனானி, சித்த வைத்தியம் என்று எதுவும் கிடையாது, அவர்களுக்கும் இந்த அலபதி வைத்தியம்தான் சொல்லிக் கொடுக்கப் படுகிறது. அதுவும் இந்தப் படிப்புப் படித்தவர்களும் கூட நகரத்தில் இருந் தால்தான், அதிகப் பணம் வரும் என்று நினைக்கிறார்கள். இவர்களும் எதற்கெடுத்தாலும், இன்ஜக்ஷன்தான் செய்கிறார்கள். வேறு நாட்டு முறையில் சூரணமோ, கஷாயமோ தயாரித்து உபயோகிப்பதில்லை. ஆகவே, இப்படிப்பட்ட படிப்பை வைத்துக்கொண்டிருப்பதின் அவசியம் என்ன

என்று கேட்கிறேன். ஏதாவது ஏற்பாடு செய்து கிராமங்களிலுள்ள மக்களுக்கு வேண்டிய வைத்திய வசதி கிடைக்கும்படியாகச் செய்வது அரசாங்கத்தின் முதற் கடமை என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அதோடு என்ஜினியரிங் கல்லூரிகள் நமது ராஜ்யத்தில் முன்பு இரண்டுதான் இருந்தன. இப்போது 11 இருக்கின்றன. அப்படி வைத்தியக் கல்லூரியும் நமது ராஜ்யத்தில் அதிகம் ஏற்பட வேண்டும். வரவு செலவுத் திட்டத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது. தொழில் கல்லூரி என்றால் 1,157 பேர்களைச் சேர்ப்பதற்கு இடமிருக்கிறது. ஆனால், வைத்தியக் கல்லூரியில் 420 பேர்கள்தான் சேருவதற்கு இடமிருக்கிறது. அதையும் அதிகப்படுத்த வேண்டும்.

இன்னொரு விஷயம் சொல்ல பிரியப்படுகிறேன். சிறு தொழில்களின் அபிவிருத்திக்கு நம் ராஜ்யத்தில் நல்ல முறையில் ஒத்தாசை செய்யப்பட்டு வருகிறது என்பதை அனுபவபூர்வமாக நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதற்காகக் கடன் கொடுக்கவும், மானியம் கொடுக்கவும் தக்க பல நடவடிக்கைகளை சர்க்கார் எடுத்துவருகிறது என்று சொல்லிக்கொண்டு இந்த விஷயத்தில் அரசாங்கத்தைப் பாராட்டுகிறேன்.

இப்போது சேலம் ஜில்லாவில் அலுமினியத் தொழிற்சாலையை ஆரம்பிக்க வேண்டுவது ரொம்ப முக்கியம். அதற்கு வேண்டிய பல சௌகரியங்கள் அங்கே இருக்கின்றன. அதைப் பயன்படுத்திக்கொண்டு நாம் அங்கே தொழிற்சாலையைத் துவக்க வேண்டும். மேலும், கோவையில்—மேட்டுப் பாளையத்தில்—காகிதத் தொழிலை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். கச்சா பிலிம் தொழில் நீலகிரியில் ஆரம்பிக்கப்படப் போகிறது என்று இரண்டு மூன்று வருஷங்களாகச் சொல்லப்பட்டு வருகிறது. அதற்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

எங்கள் கோயம்புத்தூர் ஜில்லாவில் சாம்ராஜ்நகர்—சத்தியமங்கலம்—ரெயில் பாதை எப்போதோ ஏற்பட்டுவிடப்போகிறது என்று நினைத்துக் கொண்டிருந்தோம். ஆனால், இது வரையில் அதைப்பற்றிய பிரஸ்தாபமே இல்லை. அந்த வேலை என் நின்றுவிட்டதோ தெரியவில்லை. நமது அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கு எடுத்துச் சொல்லி, அதைச் சீக்கிரம் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். சேலம்-பங்களூர் ரெயில் பாதையையும் சீக்கிரம் போடுவதற்கு நமது அரசாங்கம் தக்க முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

Mr. CHAIRMAN : Ten minutes for each speaker. Sri V. Ramalingam Pillai will now speak.

Sri V. RAMALINGAM PILLAI : சபாநாயக, நாட்டிலுள்ள நிலைமைகளையும், மக்களுடைய கஷ்டங்களையும், நம்முடைய அரசாங்கத்திற்குள்ள நிதி நிலைமையையும், மத்திய சர்க்கார் நமக்குத் தருகின்ற பணப் போதாக் குறையையும்—இப்படி எல்லாவற்றையும் நாம் சீர்தூக்கிப் பார்க்கிறபோது, இந்த வரவு செலவுத் திட்டம் மிகவும் திறமையுடன் அமைக்கப்பட்டிருக்கிறதென்று வரவேற்றாகவேண்டும். எல்லாத் துறைகளிலும் உள்ள குற்றங் குறைகளைப்பற்றி அநேகம் மெம்பர்கள் பேசிவிட்டார்கள். நான் ஒன்றும் குற்றங் குறையைப்பற்றிப் பேச வரவில்லை. ஒரு துறையில் மிகவும் முக்கியமான ஒரு விஷயத்தை நமக்கு நினைப்பூட்டிக்கொள்ளவே நான் விரும்புகிறேன். அந்தத் துறை என்னவென்றால் கல்வித் துறை. கல்வித் துறையில் மாணவர்களிடத்திலே ஒழுக்கம் குறைந்திருக்கிறதென்றும், அமைதி குறைந்திருக்கிறதென்றும் பல பெரியவர்கள் பேசி வருகிறார்கள். சமீபத்தில் வெளியான சர்வகலாசாலை மானியக் கமிஷன் அறிக்கையிலே மாணவர்களிடையே ஒழுக்கமும், அமைதியும் மிகவும் குறைந்துவிட்டது என்றும் அதற்கு மூலகாரணம் சமுதாயத்திலே ஒழுக்கமும், அமைதியும் குறைந்திருப்பதுதான் என்றும் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

11th March 1959] [Sri V. Ramalingam Pillai]

சமுதாயத்திலேயும், மாணவர்களிடத்திலேயும் ஒழுக்கம் குறைந்திருப்ப தற்குக் காரணம் என்ன ? இதை நாம் எல்லோரும் ஆராய்ந்து அறிய வேண்டும். அதற்குத் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இதற்கு மூல காரணம் என்னவென்றால் மாணவர்களிடையேயும், பொது ஜனங்களிடையேயும், தெய்வ நம்பிக்கையும், அதைச் சார்ந்த நல்ல ஒழுக்கங்களும் நாளுக்கு நாள் குறைந்து வருவதே. மாணவர்களிடையே யும், பொது மக்களிடத்திலேயும் குறைந்து வருகிற தெய்வ நம்பிக்கையை எப்படிச் சீர்திருத்துவது என்பதை நான் சொல்வதற்கு முன்னால் சில விஷயங்களை எல்லோரும் அறிய வேண்டும்.

May I sit down and speak, Sir ?

MR. CHAIRMAN : Yes. The hon. Member may sit down and speak.

(Sri V. Ramalingam Pillai then sat down and addressed the House.)

SRI V. RAMALINGAM PILLAI : நம்முடைய சமுதாயம் சோஷலிஸ சமுதாயமாக அமையவேண்டும் என்று சொல்லப்படுகிறது. சோஷலிஸ சமுதாயம் என்றால் என்ன ? காரல் மார்க்ஸ் கண்ட சோஷலிஸமா ? லெனின் சொன்ன சோஷலிஸமா ? அல்லது ஸ்டாலின் நடத்திக்காட்டிய சோஷலிஸமா ? அல்லது குருஷேவும், புல்கானினும் சேர்ந்து நடத்திய சோஷலிஸமா ? அல்லது புல்கானினை நீக்கிவிட்டு குருஷேவ் மட்டும் நடத்தி வருகிற சோஷலிஸமா ? அல்லது மகாத்மா காந்தி நமக்குத் தந்து போன சோஷலிஸமா ? (ஸ்ரீ கே. பாலசுப்பிரமணிய ஐயர் : இது மறந்தே போய் விட்டது). இந்த விஷயத்தில் நாம் ஒரு முடிவுக்கு வர வேண்டும். அதற்கு மேல்தான் நம் நாட்டின் முன்னேற்றம் இருக்கிறது.

சோஷலிஸம் என்ற வார்த்தையைச் சொன்னவுடனே, நமக்கு மூன்று எண்ணங்கள் தோன்றுகின்றன—சமதர்மம், பொதுவுடமை, விஞ்ஞான வளர்ச்சி—இவைதான். சமதர்மம் என்ற வார்த்தை பள்ளிக்கூடங்களிலும் மற்ற இடங்களிலும் அதிகமாகச் சொல்லப்பட்டு வருவதாகத் தென்படுகிறது. சமத்துவம் என்பது உலகத்தில் இல்லாத ஓர் விஷயம். "சாதிகள் இல்லையடி பாப்பா" என்று பாடிய பாரதியார் அடுத்த அடியில்

நீதி, உயர்ந்த மதி, கல்வி—அன்பு

நிறைய உடையவர்கள் மேலோர்

என்று சொன்னார். இன்றைக்கு ஆசிரியர்களும் மாணவர்களும் சமம் என்கிற 3–40
சமத்துவத்தைப் பார்க்கிறோம். "எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓர் p.m.
இனம், எல்லோரும் இந்நாட்டு மன்னர்" என்று சொன்னார் பாரதியார். ஆனால் எல்லோரும் இந்நாட்டு மன்னரா ? நாம் எல்லோரும் சமமான பேர்கள்தான். ஆனாலும், எல்லோரும் ஏககாலத்தில் சேர்மன்களா, ஏககாலத்தில் மந்திரிகளா ? இப்படிப்பட்ட எண்ணங்களெல்லாம் பள்ளிக் கூடங்களிலும் மற்ற இடங்களிலும் பரவிவருகின்றன. நாம் சோஷலிஸ சமுதாயத்தை அமைக்க விரும்புகிறோம். சமதர்மம் என்பது எப்போதும் இல்லாத விஷயம். ஏற்றத் தாழ்வுகள் எப்போதும் இருக்கத்தான் செய்யும். சமதர்மம் இருக்கும் நாடுகளில் எல்லாம் உணவிற்கும் உடைக்கும் சமதர்மம் பேசுகிறார்களேயல்லாமல் உயிருக்கு சமதர்மம் பேசுவதில்லை. அவர்களுக்கு உயிர் துச்சமானது. ஆன்ம நெறி முறையில் மனிதனுக்கு மனிதன் சமம் என்ற உணர்ச்சி சமுதாயத்தில் பரவாவிட்டால், அந்த சமுதாயம் என்ன சமுதாயம் ? நாட்டிலுள்ள செல்வத்தையெல்லாம் நாம் இன்றைக்கே பொதுவுடமையாக்கிவிடலாம். ஆனால், சமதர்மத்தை மட்டும் செய்ய முடியாது. நாம் என்ன எண்ணம் எண்ணினாலும் அப்போதெல்லாம் ரஷியாவைப் பார், சீனாவைப் பார், ஜப்பானைப் பார் என்று அயல் நாடுகளைப் பார்க்கச் சொல்கிறார்களேயல்லாமல், நமது முன்னோர்களைப் பார்க்கச்

சொல்பவர்கள் யாருமில்லை. ஆகையால், எல்லா மதங்களுக்கும் பொதுவான தெய்வ நம்பிக்கை, ஜீவகாருண்யம், நல்லொழுக்கம் இவைகளைச் சமுதாயத்திற்குப் புகட்ட நாம் முயற்சி செய்ய வேண்டும். விஞ்ஞானத் துறையில் நாம் முன்னேற வேண்டும் என்று சொல்கிறார்கள். விஞ்ஞானம் வேண்டியதுதான். ஆனால், மனிதனை மதிக்காத விஞ்ஞானம் நமக்கு எதற்கு ? ஒரு குண்டு விடுவதற்கு எவ்வளவு செலவாகிறது ? ஒரு குண்டு போட்டால் எவ்வளவு வீணாகிறது ? செலவிற்குத் தகுந்த நன்மை குண்டினால் ஏற்படுவதில்லை.

" வானவெளி ஆராய்ச்சி மிகுந்து மேலும்
வகை வகையாய் விஞ்ஞானம் வளர்ந்து அந்த
பானுவையே தொட்டுவரும் பாணம் ஏவி
பயணத்தில் முழுவெற்றி பலித்திட்டாலும்
ஆன உயிர் உடலினைத்தும் ஈசன் கோயில்
ஆகும் என்ற மெய்யறிவை அளிக்கவல்ல
ஞான ஒளி காணாத மனித வாழ்க்கை
நரகமென்று சொல்லுவதே ஞாயமாகும்."

நாம் எப்படிச் சுதந்திரம் அடைந்தோம் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

" மற்றவரும் கண்டறியா சன்மார்க்கத்தால்
மாறுபட்ட அன்னியரின் மனதை மாற்றி
சுற்றியுள்ள தேசமெல்லாம் வியந்து வாழ்த்த
சுதந்திரத்தை நாமடைந்த சூட்சுமத்தை
உற்றுணர்ந்தால் தெய்வபக்தி ஒன்றாலன்றோ
உயர்வடைந்தோம் என்றமுழு உண்மைகாண்போம் ;
சற்றிதனை அனுதினமும் மனதிற் கொண்டால்
சரியான சமதர்மம் எங்கும் தங்கும்."

" திட்டமிட்ட அரசாட்சி செய்திட்டாலும்
தீவிரமாய் செல்வங்கள் திரண்டிட்டாலும்
கட்டுதிட்டம் காவல்படை கனத்திட்டாலும்
கருணை என்ற ஒருஉணர்ச்சி கலக்காவிட்டால்
சுட்டெரிக்கும் தீ உடலிற் பட்டாற்போல
சுதந்திரத்தின் இன்பமெல்லாம் சுருங்கிப் போகும்,
அட்டியென்ன கருணை அன்பு என்பவெல்லாம்
ஆண்டவன்பால் பக்திஎன்ற அதுதான் நல்கும்."

நேற்று இங்கே கனம் அமைச்சர் திரு. மாணிக்கவேலு "எந்தக் காரியத்தையும் நம் தமிழ் நாட்டின் பண்பிற்குத் தகுந்தவாறுதான் செய்வோம் என்று உறுதி கூறுகிறேன்" என்று சொன்னார். அதை நான் வரவேற்கிறேன். அவ்வாறே தமிழ் நாட்டின் பண்பிற்கு ஒத்த முறையில் நம் கல்வி முறையைச் சீர்திருத்தவேண்டும் என்று அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

" அரும்புகின்ற தெய்வபக்தி அணுவானாலும்
அகங்காரம் குறைவதற்கு அதுவே வித்தாம்,
தரும்பயனாய் நல்லறங்கள் தழைக்கும் என்றே
தவம் மிகுந்த தமிழ்நாட்டு நமது முன்னோர்
திரும்புகின்ற பக்கமெல்லாம் தெய்வம் தோன்ற
திருக்கோயில் கோபுரங்கள் திகழச்செய்தார்,
பரம்பரையாம் பக்தியை நாம் பாதுகாத்தால்
பழுதற்ற சமதர்மம் பரவிவாழ்வோம்."

11th March 1959] [Sri V. Ramalingam Pillai]

அந்தப் பாதுகாப்பு நம் எல்லோருக்கும் வேண்டும். நெடுநாட்களாக நாம் மகாத்மா காந்தியை மறந்திருக்கிறோம். நமக்குச் சுதந்திரம் வாங்கித் தந்த அண்ணலை நாம் மறந்துவருகிறோம். மகாத்மா காந்தியைப் பெற்றெடுத்த நம் நாடு மற்ற நாடுகளுக்கு மெய்ஞ்ஞானம் காட்ட வேண்டிய நிலையில் இருக்கவேண்டும். விஞ்ஞானம் தொலைந்தாலும் பரவாயில்லை. மெய்ஞ்ஞானம் வளரவேண்டும். இன்று ரஷியாவையும் அமெரிக்காவையும் தீய போரில் இறங்காதபடி தடுத்திருப்பது மகாத்மா காந்தியின் நேர்மை உணர்ச்சி. இல்லாவிட்டால் இதற்குள் உலகில் கண்டம் விட்டுக் கண்டம் பாயும் குண்டுகள் பறந்திருக்கும். நம் கல்வித் திட்டம் முழுவதும், அரிச்சுவடியிலிருந்து விஞ்ஞானப் படிப்பு வரையிலும், நம் தமிழ் நாட்டின் பண்பிற்குத் தகுந்த மாதிரி மனிதனை மனிதன் சம ஆன்ம நேய உணர்ச்சியோடு பார்க்கக்கூடிய மக்களை உருவாக்கும் முறையில் அமைய வேண்டும் என்று வேண்டிக்கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

Srimathi SARASWATHY PANDURANGAM: மதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே, இந்த நிதி நிலை அறிக்கையைச் சமர்ப்பித்துள்ள அமைச்சர்களை நான் பாராட்டுவதுடன் மட்டுமின்றி, மக்கள் எல்லோரும் மிக மிகப் பாராட்டுகிறார்கள். ஏனென்றால் இந்த வரவு செலவுத் திட்டத்தில் புதிய வரிகள் இல்லை. வரி இல்லை என்பதை எண்ணுகிறபோது எல்லா மக்களுடைய உள்ளத்திலும் ஒரே சந்தோஷம் ஏற்படுகிறது. ஆனால், இப்போது 20–25 ஆண்டுகளாக ஒழுங்காக இருந்துவந்த, தேசிய மனப்பான்மையுடன் இருந்துவந்த, அழுகக்கூடிய பண்டங்களை விற்பவர்கள் கஷ்டப்படுகிறார்கள். வரியே இல்லை என்று எல்லோரும் சந்தோஷமாக இருக்கும்போது, வரியால் பாதிக்கப்பட்ட ஒரு சிலர் இவ்வாறு கஷ்டப்படுவது வருந்தத்தக்கது. இவர்களுக்கு வரியிலிருந்து விலக்கு அளிக்க முடியாதா என்று கேட்கத் தோன்றுகிறது. காந்தியப் போராட்டத்தில் இவர்கள் மிகவும் சேவை செய்தார்கள். தேசிய இயக்கத்தில் இவர்கள் மிகவும் தொண்டாற்றி இருக்கிறார்கள். 1930–31–ல் வெற்றிலை வியாபாரிகளும், பழ வியாபாரிகளும், பூ வியாபாரிகளும், காங்கிரஸ் அச்சிட்டுத் தந்த தாள்களைத் தங்கள் கூடைகளில் மறைத்துக்கொண்டு சென்று ஆங்காங்கே கொடுத்து நமது தேசிய இயக்கத்திற்கு ஆதரவளித்தார்கள். அவ்வாறு சேவை செய்தவர்களைப் போற்ற நான் கடமைப்பட்டிருக்கிறேன். 1931–ல் என்னைக் காரியதரிசியாகக் காங்கிரஸ் கமிட்டி நியமித்தபோது, அடக்குமுறையில் எவ்வாறு வேலை செய்வது என்று நான் கவலைப்பட்டுக்கொண்டிருந்தபோது, அச்சிட்ட தாள்களைக் கூடையில் மறைத்துச் சென்று ஆங்காங்கே கொடுக்க இவர்கள் முன்வந்தார்கள். இப்போது நடக்கும் தேர்தல்களில் கூட நமக்கு உதவி செய்ய இவர்கள் முன்வருகிறார்கள். சமீபத்தில் ஒரு நாள் திருவட்டீஸ்வரன்பேட்டைக்குச் சென்றேன். அங்கே சுபத்ரா மன்னுலால் அவர்கள் நிற்கிறார்கள். அங்கே நான் சென்றிருந்தபோது பூ வியாபாரிகள் என்னிடம் வந்து, "நீங்கள் கொடுக்கும் நோட்டீஸ்களை இந்தக் கூடையில் வைத்துக்கொண்டு போய் ஆங்காங்கே நாங்கள் கொடுக்கத் தயாராயிருக்கிறோம்" என்று சொன்னார்கள். "இவைகளை எங்கள் கூடைகளில் கொண்டு சென்று எல்லோருக்கும் கொடுப்பதுடன், இந்தப் பெட்டிக்கே நீங்கள் வோட்டுப் போடுங்கள் என்று எல்லோரிடமும் சொல்கிறோம்" என்று அவர்கள் கூறினார்கள்.

The Hon. Sri R. VENKATARAMAN : அதற்காக இவர்கள் விற்கும் பொருள்களுக்கு விதிக்கப்பட்டுள்ள வரியை நீக்க வேண்டுமா? (சிரிப்பு.)

Srimathi SARASWATHY PANDURANGAM: அதற்காக என்று நான் சொல்லவில்லை. இவர்கள் தேசிய மனப்பான்மை உடையவர்கள் என்று சொல்லுகிறேன். வரி கொடுக்காமல் சர்க்காரை ஏமாற்றி அதிகம் சம்பாதிக்க வேண்டும் என்ற எண்ணம் படைத்தவர்களாக இவர்கள் இருக்கமாட்டார்கள்.

ஆகவே, இந்த அழுகிப்போகிற பண்டங்கள் விற்கும் வியாபாரிகள் பேரில் கருணை காட்டி அவர்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்க வேண்டுமென்று நான் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன். 3-50 p.m.

[Srimathi Saraswathy Pandurangam] [11th March 1959

அடுத்தபடியாக, விவசாயத்தை எடுத்துக்கொள்வோம். விவசாயத்திற்கு உரம் அவசியம். உற்பத்திப் பெருக்கிற்குச் செயற்கை வளமும், இயற்கை வளமும் உபயோகிக்கப்படுகிறது. இதில் எது நல்லது என்று பார்ப்போம். நமது தேசத் தந்தை காந்தியடிகள் ஒரு காலத்தில் சொல்லியிருக்கிறார்கள். இயற்கை உரம்தான் மிகச் சிறந்தது என்றும் உயர்ந்தது என்றும் சொல்லியிருக்கிறார்கள். இயற்கை உரம் போட்டு உற்பத்தி செய்யக்கூடிய பொருள்கள் சாதாரணமாக மிகச் சத்துள்ளதாகத்தானிருக்கின்றன. ஆகவே, இயற்கை உரம் போட்டு உற்பத்தி செய்ததைத்தான் மக்கள் அருந்தவேண்டும், செயற்கை உரம் போட்டு உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களை அருந்தக் கூடாது என்றும் காந்தியடிகள் கூறினார்கள். இப்பொழுது கிராமங்களில் பார்த்தால் குப்பைகளை எங்கேயோ கொண்டுபோய்க் கொட்டி அவைகளை உபயோகமில்லாமல் செய்கிறார்கள். ஒருவன் ஒரு நாள் குப்பையைச் சேர்த்து வைத்தால், சராசரி ஆண்டொன்றுக்கு இரண்டு ரூபாயாவது கிடைக்கும். ஆக, இரண்டரைக் கோடி மக்கள் குப்பையைச் சேகரித்து அதை இயற்கை வளமாக உபயோகப்படுத்தினால், நாம் நமது உற்பத்தியை ஒரு நல்ல அளவிற்குப் பெருக்க முடியும். இயற்கை உரத்தை நாம் உபயோகிப்பதால் கிடைக்கக்கூடிய பொருள்கள் சத்துள்ளவையாக இருப்பதோடுகூட ஆரோக்கியகரமானதுமாகும். சாதாரண விவசாயப் பெண்களைக் கேட்டால், படிக்கத் தெரியாத அவர்கள்கூடச் சொல்வார்கள். செயற்கை உரம் போட்டு உற்பத்தி செய்த நெல்லின் அரிசி சாப்பிடுவதற்கு நன்றாகவேயில்லை. ஆனால் இயற்கை உரம் போட்டு உற்பத்தி செய்த அரிசி மிக நன்றாக இருக்கிறது என்று அந்த விவசாயப் பெண்கள்கூடச் சொல்கிறார்கள்.

அடுத்தபடியாக, கூலிப் பிரச்னையை எடுத்துக்கொண்டால், விவசாயம் செய்கிற ஆண்களுக்கு ஒரு கூலி என்றும் பெண்களுக்கு ஒரு கூலி என்றும்தான் இன்று இருக்கிறது. ஆண்களும் பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ வேண்டுமென்று சொல்கிற நாம், ஆண்களுக்கு ஒரு கூலி என்றும் பெண்களுக்கு ஒரு கூலி என்றும் வைத்துக்கொண்டிருப்பது அவ்வளவு சரியா என்று ஆலோசித்துப் பார்க்கவேண்டும். ஆண்களுக்கு ஒன்றரை ரூபாய் கொடுக்கும்போது பெண்களுக்கு முக்கால் ரூபாய்தான் கொடுக்கப்படுகிறது. நான் சொல்வது, இந்தக் கூலி வித்தியாசம் இருக்கவே கூடாது. நாற்று நடுவது ஆண்களால் முடியாது. விவசாய உற்பத்தி செய்வதில் ஆண்கள், பெண்கள் இருவருக்கும்தான் பொறுப்பு இருக்கிறது. ஆகவே, இரண்டு பேர்களுக்குமிடையில் இந்தக் கூலி வித்தியாசம் இருப்பது கூடவே கூடாது. ஆகவே, தகுந்தபடி கூலி நிர்ணயம் செய்யவேண்டுமென்று நான் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கிராமங்களில் சாக்கடைத் தண்ணீர் ஆறுகள், குளங்கள் இவைகளிலெல்லாம் சென்று விழுவதால், தண்ணீர் கெட்டுப்போய் அங்குள்ள மக்கள் தொத்து நோய்களால் பீடிக்கப்பட்டு கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, அப்படித் தொத்து வியாதிகள் வராமல் தடுப்பதற்கு நாம் புதியதொரு திட்டத்தை வகுக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

நமது அமைச்சர் அவர்கள் நேற்றைய தினம் வைத்திய முறையைப் பற்றி வெகு அழகாக விளக்கிப் பேசினார்கள். ஊசி குத்துவதிலிருந்து, மருந்துகள் கிடைப்பதில்லை என்றெல்லாம் பல விஷயங்களைப்பற்றி அனுபவ ரீதியாகச் சொன்னார்கள். நாம் வெளி நாடுகளிலிருந்து மருந்து போன்றவைகளை வரவழைத்து நிறையப் பணம் செலவு செய்து பல வைத்தியக் கல்விச்சாலைகள் அமைத்திருக்கிறோம். அவைகளை நடத்திக்கொண்டும் வருகிறோம். நாம் வருடா வருடம் எத்தனை டாக்டர்களைத் தயார் செய்கிறோம், அவர்களில் எவ்வளவு பேர்கள் கிராமங்களுக்குப் போகிறார்கள் என்று பார்த்தால், நமக்கு வேண்டியதில் 10 சத விகிதம் கூட நம்மால் சரிக்கட்ட முடியாமல் இருக்கிறது. ஆக, நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், காந்திஜி சொன்னபடி, இயற்கை வைத்திய முறைதான் மிகச் சிறந்தது. மக்களுக்குத் தொழில் கொடுக்க வேண்டுமென்றால், ராட்டையைக் கொடுத்து அவரவர்கள் தாங்கள் தாங்களாகவே நூற்று சம்பாதித்துக்கொள்ளட்டும் என்று சொன்னார்கள். தன் கையே தனக்கு

உதவி என்று இருக்க வேண்டும். காந்திஜி இயற்கை வைத்திய முறையைப்பற்றி வெகு அழகாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். சற்று முன்பு நமது தலைவர் அவர்கள் சொன்னபடி, நாம் நம் முன்னோர்களை நினைக்க வேண்டுமேயல்லாது, சைனா, ஜப்பான் என்று பார்க்கக் கூடாது. முதலில், மக்களுக்குத் தெய்வ வழிபாடு இருக்க வேண்டியது மிக அவசியம். முன் காலங்களில் குழந்தைகள் முதல் பெரியோர்கள் வரை துளசி தீர்த்தத்தைக் காலையில் சாப்பிடுவார்கள். அவர்கள் எப்படி எப்படித் தங்கள் உடலைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டுமென்பதைத் தெரிந்து வைத்துக்கொண்டிருந்தார்கள். வாரத்தில் இரண்டு நாட்கள் நமது முன்னோர்கள் உபவாஸம் இருப்பார்கள். இப்படிப்பட்ட பழக்க வழக்கங்களோடு நமது முன்னோர்கள் நல்ல மனக் கட்டுப்பாடு உடையவர்களாகவும் இருந்தார்கள். ஆகவே, நமது அரசாங்கம் ஜில்லா ஒன்றுக்கு ஒரு இயற்கை வைத்தியசாலையையாவது அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த வைத்தியசாலைகள் அமைப்பதுபற்றி யாரும் பயப்படவேண்டியதில்லை. வேறு வைத்திய முறையாக இருந்தால், நீ அப்படிச் செய்துவிட்டாய், இப்படி செய்துவிட்டாய் என்று சொல்லி தண்டிக்கலாம். ஆனால், இயற்கை வைத்திய முறையில் அப்படிப் பயப்படுவதற்கு ஒன்றுமில்லை. நல்ல காற்று, நல்ல தண்ணீர், சூரிய ஒளி இவைகள்தான் இயற்கை வைத்தியத்திற்கு வேண்டும். ஆகவே, இதில் பயப்படுவதற்கு ஒன்றுமில்லை.

இந்த சந்தர்ப்பத்தில் நான் ஒரு முக்கியமான விஷயத்தை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். கல்வி முறையில் எல்லோருக்கும் ஒரே நியதிதான் இருக்கவேண்டும். சோஷலிஸ சமுதாயத்தை நிறுவுவதற்கு நாம் பாடுபட்டுக்கொண்டிருக்கும்போது, ஒரு பகுதியினருக்குச் சலுகையும், இன்னொரு பகுதியினருக்குச் சலுகை இல்லாமலும் இருக்கக் கூடாது. ஆங்கில வைத்திய முறைப் படிப்பிற்கு, பட்டங்கள் வழங்கப்படுகின்றன. ஆனால் அதே சமயத்தில் ஆயுர்வேதம், சித்த வைத்தியம் இவைகள் படித்துவிட்டு வருகிறவர்களுக்கு டிப்ளமா அளிக்கப்படுவது கிடையாது. இரு சாராரும், ஐந்து வருடங்கள் படிக்கின்றனர். ஒருவர் ஐந்து வருடங்கள் படித்துவிட்டு, இன்னொரு பகுதியினர் மூன்று வருடங்கள்தான் படிக்கிறார்கள் என்றால், "அவர்கள் ஐந்து வருடங்கள் படித்தனர், ஆகவே, அவர்களுக்குப் பட்டங்கள் கொடுக்கப் பட்டன. இவர்கள் மூன்று வருடங்கள்தானே படித்தார்கள். ஆகவே, இவர்களுக்குப் பட்டம் இல்லை" என்று வேண்டுமானாலும் வாதத்திற்குச் சொல்லலாம். ஆனால் இவர்கள் எல்லோரும் ஐந்து வருடங்கள்தான் படிக்கிறார்கள். அப்படியிருக்கும்போது, அவர்களுக்கு மட்டும் பட்டம் கொடுத்துவிட்டு, ஆயுர்வேதம், சித்தம் படித்துத் தேறுகிறவர்களுக்குப் பட்டம் கொடுப்பதில்லை என்றால் அது சரியா ? அப்படிச் செய்தால், ஆயுர்வேதம், சித்தம் படிக்கும் மாணவர்களின் மனம் எவ்வளவு பாடுபடும் என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். அப்பொழுது, அந்த மாணவர்களின் மனம் உடைந்துவிடுகிறது. ஆகவே, இவர்களுக்கும் பட்டம் வழங்கப்படவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிப் பட்டம் கொடுக்காவிட்டால், அந்தக் கோர்ஸையே கலைத்துவிடுங்கள்.

DR. A. LAKSHMANASWAMI MUDALIAR : I agree.

SRIMATHI SARASWATHY PANDURANGAM : சந்தோஷம். அடுத்தபடியாக, போலீஸில் பெண்களை அமர்த்துவதுபற்றி இங்கு சொல்லப்பட்டது. பெண்களுக்குரிய வேலைகள் பல இருக்கின்றன. அவைகளை நாம் கொடுத்து வருகிறோம். சிறு சிறு குடிசைக் கைத்தொழில்கள் அமைத்து அவர்களுக்கு வேலை கொடுத்து வருகிறோம். நெருப்புக்குச்சித் தொழிற்சாலை இருக்கிறது. தையல் தொழில்கள் இருக்கின்றன. தோல் பை செய்யும் தொழில்கள் இருக்கின்றன. செருப்புத் தைப்பது போன்ற தொழில் இருக்கிறது. இம்மாதிரித் தொழில்களில் பெண்கள் அமர்த்தப்பட்டு வருகிறார்கள். நான் சொல்வது, பெரிய வேலைகள் வரும்போதும், அவர்களுக்கு அதில் இடம் அளிக்கப்பட வேண்டும். பெண்களை ரெயில்வேயில் டிக்கட் பரிசோதகர்களாக நியமிக்கலாம். ஸ்டேஷன் மாஸ்டர்களாகக் கூடப் பெண்களைப் போடலாம். ஆனால், அன்பால்

[Srimathi Saraswathy Pandurangam] [11th March 1959

அணைக்கும் கைகளைத் துப்பாக்கி ஏந்தும்படி செய்யக் கூடாது. எந்த நாடு நம்மீது போர் முரசு கொட்டிப் போர் தொடுக்க முன்வந்தாலும், அவர்களை நாம் காந்தீய முறைப்படி, அஹிம்ஸா தத்துவத்தைக் கை யாண்டு விரோதிகள் தலை குனியும்படிச் செய்ய வேண்டுமே தவிர, காந்தீய முறையைக் கையாண்டு அவர்கள் தலை வணங்கச் செய்ய வேண்டுமே தவிர, பிற நாடுகள் எப்படி அணுகுண்டு, ஆகாய விமானம் இவை களைக் கொண்டு போர் செய்கிறார்களோ அதேபோல் நாமும் செய்ய வேண்டுமென்று அவர்களைக் காப்பியடிக்கப் பார்ப்பது நமது இந்திய தேசத்திற்கு ஒவ்வாத காரியமாகும். நாம் பிற நாடுகளுக்கு வழிகாட்டி யாக இருக்க வேண்டுமென்று இச்சமயத்தில் நான் எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். அதிகமாக இருப்பதை ஏழைகளுக்குப் பகிர்ந்து கொடுக்க வேண்டும் என்ற மனப்பான்மை வேண்டும் என்று வினோபாஜி அவர்கள் கூறிய அந்த அடிப்படையில் நமது தேசம் இருக்க வேண்டுமென்று நினைக்கும்பொழுது, யுத்த தளவாடங்களில் பெண்களுக்குப் பயிற்சி அளிக் காமல், அவர்களுக்கு நல்லதோர் தொழிலைக் கொடுக்க வேண்டுமென்று
4 p.m. சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறேன். அவர்களுக்குக் கொடுக்கவேண்டிய தொழில் ஏராளமாக இருக்கிறது. இந்த வரவு செலவுத் திட்டத்தை நல்ல முறையில் அமைத்துத் தந்த அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

Sri JOHN ASIRVATHAM: Mr. Chairman, may I, at the outset, offer my heartfelt felicitations to the Hon. the Minister for Finance on representing a surplus Budget without the levy of fresh taxes? But, at the same time, I must point out that he has not resorted to taxation this year because the citizens of the Madras State are still groaning under the heavy taxation imposed in the previous years. Speaking on the Budget the other day, my hon. Friend, Mr. Mohamed Raza Khan, that great, great Muslim League Leader of South India (Hon. Members: No.) said times without number, 'I must congratulate the Finance Minister on this happy state of affairs and all that.' But my Friends opposite like Mr. Kosalram subjected the Budget to the severest criticism.

Sri MOHAMED RAZA KHAN: My colleague on this side is not fair to me. I never paid so much encomium. That is not my habit. What I said was that the Budget position revealed a happy state of affairs. Nothing more than that.

Sri A. M. ALLAPICHAI: Why should he fear even if he has praised him?

Sri MOHAMED RAZA KHAN: I am not accustomed to that.

Sri JOHN ASIRVATHAM: I stand corrected. Both in the Governor's Address and in the Budget speech of the Finance Minister reference was made to the seasonal conditions in Ramanathapuram and Tirunelveli districts. I know, in Tirunelveli district, taluks like Nanguneri and Tiruchendur have been hard hit by the failure of monsoons and drought. In this connection, I would ask the Hon. the Minister for Agriculture what has happened to the Manimuthar Project. Great expectations were aroused in the minds of the citizens of Tirunelveli about the famous Manimuthar Project. But I am told that though the project has been completed,

11th March 1959] [Sri John Asirvatham]

water is not permitted to flow to irrigate the thirsty fields by the authorities concerned. If that be the case, I appeal to the Government to see that the authorities are impartial in letting the flow of Manimuthar water to those fields.

Coming to Education, I am very disappointed to find that the important recommendation of the Legislature Sub-Committee on Education has not been implemented as yet. Instead of the District Educational Officers' annual visit, it was suggested that experts on different subjects should visit schools and guide the heads and staff on the lines of the University Commission. But nothing has been done so far. I hope the Hon. the Minister for Education will pay particular attention to this question and see that the recommendation is implemented soon. The present Inspectorate is a fault-finding agency. In England, I am told, the Inspectors do not visit the schools for three years and five years together. If the headmaster of a school wants some advice, he could request the Inspector to go to the school and offer his advice. But here Inspectors come to the school to find out whether the regulations under the Madras Educational Rules have been violated and the Inspector of European and Anglo-Indian Schools comes to the school purely to find out whether the Code of Regulations for Anglo-Indian Schools has been violated, and they offer their remarks. Now, I want the Government to see that the Inspectorate is made more an advisory body than a fault-finding body. Sometimes we find young, inexperienced District Educational Officers, who are freshers to the Department of Anglo-Indian Education. It is a matter to be regretted. I hope the Government will look into these matters. We are supposed to live in days of Independence. But now the bureaucratic regime is showing its ugly head more than it did during the days of foreign rule.

I thank the Government as the representative of the great army of teachers for increasing their emoluments by another five rupees. But something more must be done, atleast house-rent allowance to teachers living in cities may be granted as an experimental measure. Also, my colleagues who pleaded the other day said that medical facilities should be extended to the teachers of our State. I hope the Government will look into the matter and will not say that the question of finance stands in the way. I remember a certain meeting addressed by the late Mr. S. Satyamurthi. At that time, our friend and former colleague, the late Mr. V. Chakkarai Chetty, was the Mayor of Madras. Mr. Satyamurthi gave out several valuable suggestions for the City Fathers to carry out. In winding up the meeting Mr. Chakkarai Chettiar said : "Well, when I was a student of the Christian College High School, a certain professor used a certain proverb as an alliteration like this. 'Round and round the rugged rock the rusty rascal ran. The rugged rock is finance'." But the Government can easily get round the rugged rock and do their utmost to the poor teachers who are moulding and shaping the destinies of the future citizens of India.

[Sri John Asirvatham] [11th March 1959

I must congratulate the Hon. the Leader of the House and the Hon. the Minister for Industries on having launched several 4-10 p.m. small-scale industries.

Sri MOHAMED RAZA KHAN : The hon. Member has congratulated the Hon. the Leader of the House half-a-dozen times.

Sri T. P. SRINIVASAVARADAN : He is only following the hon. Member Sri Mohamed Raza Khan.

The Hon. Sri R. VENKATARAMAN : The hon. Member Sri Mohamed Raza Khan has counted !

Sri JOHN ASIRVATHAM : I strongly plead for a free First-Class pass being granted to hon. Members for travelling throughout the State, particularly the representatives of Graduates and Teachers constituencies.

Sri A. M. ALLAPICHAI : Why discriminate?

Sri JOHN ASIRVATHAM : We have been returned from the entire State whereas my hon. Friend's constituency is next door.

(The Chairman sounded the gong.)

Sri JOHN ASIRVATHAM : I will finish in another two minutes. When the Members of Parliament can enjoy a free First-Class pass throughout India, why not give a free First-Class pass within the limits of the Madras State to Members of the State Legislature to enable them to be in constant touch with their constituencies?

Sir I welcome the exodus of the Madras Legislature to Ooty during summer months. This brings to my mind, being a student of history, what the third British Viceroy, Sir John Lawrence, said when he set up the Summer Capital of India in Simla. He said : ' Six days of work in the dust and heat of Calcutta can be done in one day in the cool heights of Simla '. I hope the same thing the Government and the Legislature will experience when they move to the hills of the Nilgiris.

Now, I would like to say a word about the City Improvement Trust and finish my speech. The sum clearance and the beautification of the City are left to both the Corporation and the City Improvement Trust. This is not a very satisfactory way of dealing with the matter, because the Corporation is burdened with so much of work. I would suggest that the City Improvement Trust be invested with all the powers to clear the slums and beautify the City.

I thank you, Sir, for the indulgence shown to me.

Sri V. M. SURENDRAM : தலைவர் அவர்களே, 1959–60-ம் ஆண்டு பட்ஜெட்டைச் சமர்ப்பித்த நிதி அமைச்சர் அவர்களைப் பாராட்டிச் சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். எனக்கு முந்திப் பேசிய அங்கத்தினர்கள் பொதுவாகப் பல விஷயங்களைப்பற்றிப் பேசிவிட்டார்கள். நான் குறிப்பாக நீலகிரி ஜில்லாவைப் பொறுத்த சில விஷயங்களைப்பற்றிப் பேசி

11th March 1959] [Sri V. M. Surendram]

முடித்துக்கொள்ளுகிறேன். நீலகிரி ஜில்லாவில் ஒருவிதமான கைத்தொழிலும் ஆரம்பிக்கப்படவில்லை. கைத்தொழில் ஆரம்பிப்பதற்குப் போதுமான வசதிகள் அங்கு இருப்பதால், அங்கு சீக்கிரம் ஏதாவது ஒரு கைத்தொழிலை ஆரம்பிப்பதற்கு உதவி செய்யுமாறு நமது கைத்தொழில் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

எங்கள் ஜில்லாவில் கச்சா பிலிம் பாக்டரி ஆரம்பிக்கப் போவதாக 3, 4 வருஷங்களாகச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், இது வரையிலும் ஒன்றும் ஆரம்பிக்கப்படவில்லை. அது எப்பொழுது தொடங்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன். பார்லிமெண்டிலும், சட்டசபையிலும் இதுபற்றி அநேக தடவைகள் கேள்விகள் போடப்பட்டன. அதற்கு சீக்கிரம் வந்துவிடும், சீக்கிரம் வந்துவிடும். என்றுதான் பதில் வந்துகொண்டிருக்கிறது.

THE HON. SRI R. VENKATARAMAN : கேள்வி போட்டால் இண்டஸ்டிரி வந்துவிடாது. இண்டஸ்டிரி வைத்தால்தான் வரும்.

SRI V. M. SURENDRAM : 3, 4 வருஷங்களாகக் கூடிய சீக்கிரம் இண்டஸ்டிரி ஆரம்பிக்கப்போகிறோம் என்று சர்க்காரே சொல்லுகிறார்கள்: கேள்வியிலே இண்டஸ்டிரி வராது என்றும் அவர்களே சொல்லுகிறார்கள்: எனக்கு யார் தகுந்த பதில் சொல்லுவார்கள் என்று தெரியவில்லை. இருந்தபோதிலும் சர்க்கார்தான் இதைச் செய்யவேண்டிய நிலைமை இருப்பதால், கைத்தொழில் அமைச்சர் அவர்கள் இதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, ஜப்பானிலிருந்து ஒரு தூது கோஷ்டி வந்திருக்கிறது. அவர்கள் "ரேயான் ஸில்க் பாக்டரி" ஆரம்பிப்பதற்குச் சில இடங்களைத் தேடிக்கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக, நீலகிரி ஜில்லாவிற்குப் போன வாரம் வந்திருந்தார்கள். அங்கே வந்து அவர்கள் சில இடங்களை "விஸிட்" செய்தார்கள். இதற்கு முக்கியமாக மூங்கில், வாட்டில், யூகலிப்டஸ் மூன்றும் தேவை என்று சொல்லப்படுகிறது. இந்த மூன்றும் நீலகிரி ஜில்லாவில் எல்லா இடங்களிலும் அதிகமாகக் கிடைக்கின்றன. கூடலூர் தாலூகாவில் நிறைய "பாம்பூஸ்" இருக்கின்றன. அந்தத் தாலூகாவை "ஸெலக்ட்" செய்தால், இந்த பாக்டரிக்கு ஏதுவாக இருக்கும். ஆகவே, நீலகிரி ஜில்லாவில் இந்த பாக்டரியை ஆரம்பிப்பதற்கு மந்திரி அவர்கள் உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, ரெவின்யூ டிபார்ட்மெண்டு ஹரிஜனங்களுக்கு நிலம் விநியோகம் செய்வதிலே அதிகக் காலதாமதம் ஏற்படுகிறது. மூன்று வருஷங்களுக்கு முன்னால் சென்னை சர்க்கார் இதற்காக ஒரு தாசில்தார் தலைமையில் ஒரு "special staff" போட்டார்கள். சர்க்கார் நிலங்களை ஹரிஜனங்களுக்கு வழங்குவதற்காக ஏற்படுத்தப்பட்ட அந்த "special staff" இப்பொழுது பிப்ரவரி மாதம் 28-ம் தேதியோடு கலைக்கப்பட்டுவிட்டது. அவர்கள் இது வரையில் 250 ஏக்கர் நிலம்தான் விநியோகம் செய்திருக்கிறார்கள். சர்க்காரிடம் வந்த "அப்ளிகேஷன்" சுமார் 10,000. பத்தாயிரம் பேர்களில் 250 பேர்களுக்குத்தான் நிலம் வழங்கப்பட்டிருக்கிறது. மற்றவர்களுக்கு என்ன செய்வார்கள் என்று இது வரையில் தெரியவில்லை. தாசில்தார் தலைமையில் போடப்பட்ட "special staff" சிப்பந்திகளையும் கலைத்துவிட்டார்கள். நீலகிரி ஜில்லாக் கலெக்டருக்கு மற்ற ஜில்லாக் கலெக்டர்கள் போல் "பவர்ஸ்" இல்லை. குறுகிய அளவுதான் "பவர்" இருக்கிறது. மற்ற ஜில்லாக் கலெக்டர்களைப்போல் "லாண்டு அஸைன்மெண்டு" பவர் நீலகிரி ஜில்லாக் கலெக்டருக்கு இல்லை என்று தெரியவருகிறது. நீலகிரி ஜில்லாக் கலெக்டருக்கும் அந்தப் பவர் கொடுத்தால், அவர் தன்னுடைய சொந்த "டிஸ்கிரெஷனை" உபயோகப்படுத்தி நிலங்களை விநியோகிக்கலாம். குறிப்பாக, ஹரிஜனங்கள் ரொம்பவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு நிலம் விநியோகிக்க ஹேதுவாக நீலகிரி ஜில்லாக் கலெக்டருக்குப் போதுமான "பவர்" கொடுக்கும்படி நமது ரெவின்யூ அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, நமது மந்திரி அவர்கள் வரி போடாததுபற்றி எல்லா ஜில்லாவாசிகளும் சந்தோஷப்பட்டுக்கொண்டிருக்கும்பொழுது, நீலகிரி ஜில்லாவாசிகள் மட்டும் ரொம்பக் கவலைப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். காரணம், ராஜ்ய சர்க்கார் வரி போடவில்லை என்றாலும், மத்திய சர்க்கார் போட்டிருக்கிறார்கள். எப்படி என்று கேட்டால், நீலகிரி ஜில்லாவில் அதிகமான போக்குவரத்து லாரிமூலம்தான் நடந்துகொண்டிருக்கிறது. நீலகிரியிலிருந்து மேட்டுப்பாளையத்திற்கு உருளைக்கிழங்கு கொண்டுபோவது, மேட்டுப்பாளையத்திலிருந்து நீலகிரிக்கு அரிசி கொண்டுபோவது போன்ற போக்குவரத்தெல்லாம் லாரிகள் மூலம்தான் நடந்துகொண்டிருக்கிறது. லாரிக்கு டீஸல் ஆயில் வேண்டியிருக்கிறது. அந்த டீஸல் ஆயிலுக்கு ஒரு காலனுக்கு 40 நயா பைஸா வரி ஏற்றியிருக்கிறார்கள். இது ரொம்பவும் வருந்தத்தக்கது. எல்லா ஜில்லாவாசிகளும் சந்தோஷப்படக்கூடிய சமயத்தில், நீலகிரி ஜில்லாவாசிகள் மட்டும் கவலைப்பட்டுக்கொண்டிருப்பது நல்லதல்ல. ஆகவே, நமது ராஜ்ய சர்க்கார் மத்திய சர்க்காரிடம் எங்களுடைய எதிர்ப்பைத் தெரிவித்து அந்தக் குறையை நிவர்த்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, ஹரிஜனங்களைப் பொறுத்த வரையில், யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷனில் சமீபத்தில் நமது மாஜி சபாநாயகரான ஸ்ரீ சிவஷண்முகம் பிள்ளை அவர்களுக்கு ஒரு ஸ்தானம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், மதராஸ் பப்ளிக் சர்வீஸ் கமிஷனில் இது வரையில் ஹரிஜனங்களுக்கு, ஷெட்யூல்டு காஸ்ட் மெம்பர், பிரதிநிதித்துவம் கிடையாது. இம்மாதிரிப் பிரதிநிதித்துவம் இல்லாத காரணத்தினால் பல அநியாயங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. "குவாலிபைடு காண்டிடேட்டுகளுக்கு" இடம் கிடைக்காமல் போய்விடுகிறது. கூடிய சீக்கிரம் . . .

* THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I think the hon. Member has, by mistake, let slip a word 'Anyayam' (அநியாயம்). I think he will withdraw that word "I think it is not proper to refer to the Public Service Commission in those terms."

SRI V. M. SURENDRAM : நான் அதை வாபஸ் வாங்கிக்கொள்ளுகிறேன். இருந்தபோதிலும், முக்கியமாக ஒரு ஹரிஜன அங்கத்தினர் பப்ளிக் சர்வீஸ் கமிஷனில் நியமிக்கப்படவேண்டியது மிகவும் அவசியம். இதை அநேக நாட்களாகச் சொல்லிக்கொண்டிருந்தபோதிலும், இன்னமும் ஒரு ஹரிஜன மெம்பரைப் போடாமல் இருக்கிறார்கள். முக்கியமாக, சீக்கிரத்திலே அம்மாதிரி ஒரு மெம்பர் நியமிக்கப்படவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

வேலை தேடித்தரும் ஸ்தாபனத்தினிடம் அநேகம் பேர்கள் ரிஜிஸ்டர் செய்துகொள்ளுகிறார்கள். இருந்தாலும், சில முனிஸிபாலிடிகளில், ஜில்லா போர்டுகளில், குறிப்பாக மதராஸ் கார்ப்பரேஷனில், "எம்பிளாய் மெண்டு எக்ஸ்சேஞ்சில்" ரிஜிஸ்டர் செய்துகொள்ளாதவர்களை "அப்பாயிண்டு" செய்துவிடுகிறார்கள். அதனால், ரிஜிஸ்டர் செய்துகொண்டவர்கள் ரொம்பவும் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, ரிஜிஸ்டர் செய்துகொண்டவர்களுக்கு மாத்திரம் உத்தியோகம் கொடுக்கவேண்டும். ரிஜிஸ்டர் செய்துகொள்ளாதவர்களுக்குக் கொடுக்கக் கூடாது என்ற உத்தரவைப் போடுமாறு கேட்டுக்கொண்டு, எனக்கு இவ்வளவு நேரம் பேச அனுமதி தந்த தலைவர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

* SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : சேர்மென், ஸார், நிதி அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் வரவு செலவுத் திட்டத்தை நான் பாராட்டுகின்றேன். அதோடு இதில் எந்த
4-20 p.m. விதமான புதிய வரிகளையும் கொண்டுவராததினாலும், உற்சாகத்துடன் நான் வரவேற்கிறேன். பலவிதத்திலும் இப்போது விலைவாசிகள் ஏறிக்கொண்டே போவதினால், அதைத் தடுப்பதற்காக அரசாங்கம் பலவிதமான நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறது. இதே நேரத்தில் விவசாயிகளுக்குத் தேவைப்படுகிற இரும்பு சாமான்கள், உழவுக்கு வேண்டிய கருவிகள்,

கால்நடைகளுக்குத் தேவைப்படுகிற பருத்தி விதை, பிண்ணாக்கு, நெல் தவிடு முதலியவைகள் எல்லாம் சுலபமாக, குறைந்த விலையில் விவசாயிகளுக்குக் கிடைப்பதில்லை. இவைகள் எல்லாம் விவசாயிகளுக்குக் குறைந்த விலையில் சுலபமாகக் கிடைப்பதாக இருந்தால், இந்த விலைக் கட்டுப்பாடுகளினால் விவசாயிகளுக்குப் பாதகம் ஏற்படாது. விவசாயிகளுக்கு வேண்டிய பொருட்கள் எல்லாம் குறைந்த விலையில் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்து கொடுத்தால், விவசாயிகள் அதிகமாகப் பாதிக்கப்படமாட்டார்கள். அதேபோல், பல நண்பர்கள் இங்கே குறிப்பிட்டது போல், டீஸெல் எண்ணெயின் விலை அதிகமாகியிருக்கிறது.

(Deputy Chairman in the Chair.)

எலக்ட்ரிஸிடி இல்லாத இடங்களில் எல்லாம் விவசாயிகள் டீஸெல் எண்ணெய் என்ஜின்களை உபயோகித்து வருகிறார்கள். இப்போது இந்த விவசாயிகள் எல்லாம் டீஸெல் எண்ணெயை அதிக விலை கொடுத்து வாங்க வேண்டியிருக்கிறது. ஆகவே, சர்க்கார் இதில் கவனம் செலுத்தி வேறு ஏதாவது காரியங்களுக்கு உபயோகப்படுத்தப்படும் டீஸெல் எண்ணெய்க்கு அதிகமாக விலையை நிர்ணயித்தாலும், விவசாயத்தைப் பொறுத்த மட்டில், பழைய விலைக்கே கிடைக்கும்படி செய்வதற்கு வேண்டிய ஏற்பாடு செய்ய வேண்டுமென்று விவசாயிகளின் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, விதைப் பண்ணைகளை எடுத்துக்கொண்டால், விதைப் பண்ணைகள் நம் நாட்டில் எந்த முறையில் செயல்பட்டு வந்திருக்கின்றன என்பதைப்பற்றி இந்த அறிக்கையில் விரிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. "ஏதோ அதிகமான அளவில்தான் பண்ணைகளை ஏற்படுத்த வேண்டுமென்று திட்டமிட்டிருந்தோம், ஆனால் குறைவாகவே விதைப் பண்ணைகளை ஏற்படுத்த முடிந்தது. இனிமேல் இப்போது இருப்பதைக் காட்டிலும் குறைவாகத்தான் விதைப் பண்ணைகள் நடத்தப்படும்" என்று விளக்கமாக அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. இதில் என்னவெல்லாம் கஷ்டங்கள் இருக்கின்றன என்று என்னைப் பொறுத்த வரையில் கேட்பதாக இருந்தால், என்னால் சில விபரங்களைக் கூற முடியும். இந்த விதைப் பண்ணை ஏற்படுத்துவதில் ஈடுபட்டிருக்கின்ற ஆபீஸர்களுக்குப் பல தொல்லைகள் ஏற்படுகின்றன. விதைப் பண்ணையை ஏற்படுத்துவதற்காக நல்ல நிலங்களைத் தேர்ந்தெடுத்துப் பார்த்து அதற்குக் குத்தகை சிறிது கூடுதலாக இருந்தாலும், அந்த நிலங்களைக் குத்தகைக்கு எடுத்தால், அதற்கும் ஆபீஸர் பேரில் சில குறைகள் சொல்லுகிறார்கள். பெரிய பணக்காரர்களிடமிருந்து அதிகக் குத்தகைக்கு வாங்கிவிட்டார்கள் என்ற குறையைச் சொல்லுகிறார்கள். குறைந்த குத்தகைக்கு நிலங்களை எடுத்தால், அதில் வேண்டியபடி பலன் கிடைப்பதில்லை. காரணம், குத்தகைக்கு எடுத்த நிலத்தில் தண்ணீர் வசதி இராது, அதிலிருக்கின்ற கிணற்றில் திடீரென்று தண்ணீர் இல்லாமல் போய்விடும். அப்போது கிணற்றை ஆழப்படுத்த வேண்டியிருக்கும்; இதற்காக சர்க்காரிலிருந்து உத்தரவு பெற வேண்டும். அதற்காக சர்க்காருக்குத் தண்ணீர் இல்லாத விவரங்களை எல்லாம் எழுதி உத்தரவு வாங்கிக் கிணற்றை ஆழப்படுத்திப் பயன்படுத்துவதற்கு அதிகக் கால தாமதம் ஏற்படுகின்றது. இதன் காரணமாக அந்த நிலங்களில் நல்ல விதமான விளைவோ, அல்லது நல்ல விதமான விதைகளோ கிடைப்பதில்லை. ஆகையினால்தான் குத்தகை சிறிது கூடியிருந்தாலும் நல்ல நிலங்களை விதைப் பண்ணைகளுக்குத் தேர்ந்தெடுக்க வேண்டியிருக்கிறது. அதோடு சமீபத்தில் (ஸீலிங்) நிலத்திற்கு உச்ச வரம்பு கட்டும் திட்டம் வரப்போகின்ற காரணத்தால், பலரும் தங்கள் நிலங்களை விலைக்குக் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். குறைந்த விலைக்கேனும் கொடுத்து விடுவதுதான் நல்லது என்று எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த நேரத்தில் இவ்விதம் கொடுக்கப்படும் நிலங்களை விதைப்பண்ணை நடத்துவதற்காக இன்றைய நிலையில், இருக்கக்கூடிய விலைக்கு வாங்கிக்கொண்டால், இம்மாதிரியான விதைப் பண்ணைகளை நடத்துவதற்கு வசதியாக இருக்கும் என்று தெரிகிறது. பலவிதத்திலும் பல

அபிவிருத்திகளைச் செய்யவேண்டுமென்று சர்க்கார் எண்ணிக்கொண்டிருக்கிற இந்நேரத்தில் சர்க்காரே ஏற்றெடுத்து நடத்துவது நன்ருக இருக்கும் என்பதை எடுத்துச் சொல்லிக்கொள்கிறேன்.

அதேபோல் நீர்பாசன வசதிகளைச் செய்து கொடுப்பதிலும் சர்க்கார் பல காரியங்களைச் செய்து வருகிருர்கள். இதற்காகப் பல திட்டங்களை நாம் நிறைவேற்றி வருகிறேம். குறிப்பாகப் பரம்பிக்குளத் திட்டம் முக்கியமானது. இதன் மூலம் எங்கள் பகுதி மிகவும் பயனடையும் என்று எதிர்பார்க்கிறேன். இதைப்பற்றியும் இந்த பட்ஜெட் அறிக்கையில் "இத்திட்டத்தின் மூலம் கிடைக்கும் தண்ணீரை எல்லாப் பகுதிகளுக்கும் நியாயமான முறையில் பங்கிட்டுக் கொடுக்க வேண்டுமென்பதே சர்க்காரின் கொள்கை" என்று குறிப்பிட்டிருப்பது மிகவும் வரவேற்கத்தக்கதாகும். ஏனென்ருல் இந்தத் திட்டத்தின் மூலம் கிடைக்கும் தண்ணீர் வசதியை ஆரம்பத்தில் இருக்கும் பொள்ளாச்சி தாலூகாவிலுள்ளவர்கள் மட்டும் பயன்படுத்திக்கொள்வார்களோ என்று சிலர் நினைக்கிருர்கள். இந்த நிலையில் எல்லோருக்கும் சமமாகக் கிடைக்கும் என்று குறிப்பிட்டிருப்பது கடைசியில் இருக்கின்றவர்களுக்கும் ஒரு பெரிய நிம்மதியைக் கொடுக்கும் என்பதால் அதை நான் வரவேற்கிறேன். அதோடு இந்தத் திட்டத்தின் மூலமாக எல்லோருக்கும் அனுகூலம் கிடைக்கும் என்பதைத் தெரிவித்து கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கால்நடை வளர்ப்பு சம்பந்தமாக, பல பண்ணைகளை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிருர்கள். ஒவ்வொரு ஜில்லாவிலும் இதற்காகப் பண்ணைகள் ஏற்படுத்தப்பட்டிருப்பதாக அறிகிறேன். இதற்கு மேய்ச்சல் தரை அதிகமாகத் தேவைப்படுகிறது. தற்போது ஹோசூரில் பெரிய அளவில் ஒரு பண்ணை நடந்துவருகிறது. பள்ளத்தூர் என்ற இடத்திலும் "செட்டிநாடு பண்ணை" என்று அழைக்கப்படுகின்ற ஒரு பண்ணை நடந்துவருகிறது. மேய்ச்சல் தரை இல்லாவிட்டால், இந்தப் பண்ணையைச் சரிவர நடத்த முடியாது என்பதை சர்க்கார் தனது அனுபவ பூர்வமாக அறிந்து வருகிறது. அந்த முறையில் மற்ற விவசாயிகளும் கால்நடைச் செல்வத்தைப் பெருக்கவேண்டும், கால்நடைகளை நல்ல முறையில் வளர்க்க வேண்டும் என்று எண்ணிஞல், அவர்களுக்குத் தேவைப்படுகிற மேய்ச்சல் தரை கிடைக்க வேண்டும். இந்த வசதியைச் செய்து கொடுத்தோமாஞல்தான் கால்நடைச் செல்வத்தை நல்ல முறையில் வளர்க்க முடியும். இதை சர்க்காரும் அனுபவ பூர்வமாகக் கண்டிருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் வேருெரு விஷயத்தையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். நான் சமீபத்தில் சென்னைக்கு வருவதற்கு முன்ஞல், எங்கள் பகுதியிலுள்ள **Agricultural Income-Tax Officer**-ஐச் சந்தித்துச் சில விபரங்களைச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன். அதில் தெரிந்துகொண்டது—அதாவது மேய்ச்சல் தரை இனத்தில் அவர்கள் கொடுத்திருக்கின்ற விளக்கம் "பாஸ்சர் லாண்ட்ஸ்" என்பது. ஆஞல், நாம் சொல்லுகின்ற "கிரேஸிங் லாண்ட்ஸ்" இதில் உட்படுத்தப்படவில்லை. மாடுகளுக்கு மேய்ச்சல் தரையாக உபயோகப்படுத்தப்பட்டு வரும் "கிரேஸிங் லாண்ட்ஸ்" என்பதை "பாஸ்சர் லாண்ட்ஸ்" என்பதோடு எடுத்துக்கொள்வதில்லை என்று தெரிகிறது. சாதாரணமாக "பாஸ்சர் லாண்ட்ஸ்" என்று குறிப்பிடுவது ஊர் மந்தையாகயிருக்கும் இடங்களைத்தான். அதாவது கால்நடைகளின் ஓய்வுக்காக, (air) காற்று வாங்குவதற்காக விடப்பட்டிருக்கும் இடம், "கிரேஸிங் லாண்ட்ஸ்" என்பது, அன்ருடம் தண்ணீர் விட்டு வளர்க்கக்கூடிய புல் தரை அல்ல. இந்தவிதமான வித்தியாசம் இருப்பதை உணர்ந்து விவசாய வருமான வரியிலிருந்து இவற்றிற்கு விலக்கு அளிக்க வேண்டும். இதைப்பற்றி அங்கங்கே இருக்கக்கூடிய ஆபீஸர்களுக்கு சர்க்கார் தெளிவான முறையில் நல்ல விளக்கம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

4-30 p.m. அடுத்தபடியாக, சென்னை நகரத்திற்கு அருகாமையில் பால் பண்ணையொன்று வைப்பதாக இப்பொழுது ஏற்பாடு இருக்கிறது. அதற்கு அனுசரணையாக இரண்டாயிரம் மாடுகளைப் பராமரிப்பதற்காக 40 லட்சம் ரூபாய் செலவழித்து வசதிகள் பெருக்கப்படும் என்று நிதி அமைச்சர்

அவர்களுடைய உரையில் சொல்லியிருக்கிறார்கள். இது எந்தமாதிரி இருக்க வேண்டும் என்ற எனது எண்ணத்தை இங்கே சொல்லாமல் இருக்க முடியாது. இப்பொழுது டாக்ஸி ஓடுகிறது ; ஒரு டாக்ஸி சொந்தக்காரர் இருக்கிறார். அவர் இத்தனை டாக்ஸிகள்தான் வைத்துக்கொள்ளலாம் என்று பெர்மிட் கொடுக்கிறோம். அந்த டாக்ஸிகளை அவர்களுடைய பராமரிப்பிலே பார்த்துக்கொள்கிறார்கள். டாக்ஸி நமக்கு உபயோகப்படுகிறது. அதைப் போல், பால் பண்ணையை சர்க்காரே நேரடியாக வைத்து நடத்துவதைவிட, அங்கு வேண்டிய சௌகரியங்கள் அவர்களுக்குச் செய்து கொடுத்து, யார் மாடுகளை வைத்து, நல்ல ஜாதி எருமைகளை வைத்துக் கறந்து கொடுக்கிறார்களோ அவர்களுக்கு எல்லாச் சௌகரியமும் செய்து கொடுக்க வேண்டும். அவர்கள் இத்தனை மாடுகளைத்தான் பண்ணையிலே வைத்துக்கொள்ளலாம் என்று லைசென்ஸ் கொடுக்க வேண்டும். இப்பொழுது அப்படித்தான் ஆரே காலனியிலே பம்பாயிலே நடந்துவருகிறது. ஒருவர் அதிக பட்சமாக 240 எருமை, பசு மாடுகள் வைத்துக்கொள்ளலாம் என்று நிர்ணயித்து லைசென்ஸ் கொடுக்கப்படுகிறது. ஒன்றிலிருந்து 240 கால்நடை வரைக்கும் வைத்துப் பால் கறந்து கொடுக்கலாம் என்று இருக்கிறது. அதற்கு வேண்டிய தீனி, மற்ற கான்ஸென்ட்ரேட்ஸ், வைத்திய உதவிகளெல்லாம் அந்தக் காலனியிலே செய்து கொடுக்கிறார்கள். அதற்காக பில்லிலே கழித்துக்கொள்ளுகிறார்கள். பால் கறக்கக்கூட ஆட்களை வைத்திருக்கிறார்கள். பால் கறக்கின்றவர்களுக்குக் கொடுக்கும் சம்பளம், கூலி போட்டு அதையும் கழித்து மாதத்திலே இவ்வளவு என்று கொடுத்துவிடுகிறார்கள். கணக்கைப் பார்க்கும்போது, அவர்கள் போட்ட முதலுக்கு 6, 7 சத வீதம் வரக்கூடிய நிலை அவர்களுக்கு ஏற்பட்டுவிடுகிறது. அந்தக் கன்றுகளை அவர்கள் பராமரிக்கக்கூடிய வகையிலே அவர்களே பராமரிக்கலாம். அல்லது அங்கேயே விட்டுவிட்டுப் பராமரித்துக் கொடுக்க வேண்டுமென்றால், வளர்த்துக் கொடுக்கிறார்கள். இம்மாதிரி இந்தப் பண்ணையை ஏற்பாடு செய்வார்களானால், நகருக்கு நல்ல முறையிலே பால் சப்ளை கிடைக்கும் என்பது எனது எண்ணம். அல்லது அவர்களாகச் செய்ய வேண்டுமென்றால், பொறுப்பு சர்க்காருக்கு வந்துவிடுகிறது. பொருள் சர்க்கார் செலவு செய்து வாங்க வேண்டிய நிலை வந்துவிடுகிறது. இந்தச் சௌகரியங்கள் செய்ய வேண்டுமென்ற எனது அபிப்பிராயத்தை இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

கூட்டுறவு முறையிலே பல சங்கங்கள் மூலமாக உயர் ரக விதைகள், விவசாயக் கருவிகள், நீர்ப்பாசன வசதிகள் முதலியன கொடுக்கும்படி ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இங்கே குறிக்கப்பட்டிருக்கிறது. அதே இடத்தில், கால்நடைகளுக்கு வேண்டிய தீனிகளும் கொடுப்பது என்ற ஏற்பாட்டையும் சேர்த்துவிட்டார்கள் என்றால், நான் சொல்லும்படியான கட்டுப்பாடான விலைக்குக் கிடைக்கக்கூடிய நிலை ஏற்பட்டுவிடும். கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக விவசாயத்திற்கு வேண்டியவைகள் விநியோகம் செய்யப்படவேண்டுமென்று இதிலே கொடுத்திருக்கிறார்கள். கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவே கால்நடைத் தீனிகளையும் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்தால், கட்டுப்பாடான விலைக்குக் கிடைப்பதற்குச் சௌகரியம் ஏற்படும் என்பதை நான் இந்த இடத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, மின்சார விஷயத்திலே இப்பொழுது நமது சென்னை ராஜ்யம் ரொம்ப முன்னணியில் நிற்கிறது. மின்சார இலாகாவை எல்லோரும் பாராட்டாமல் இருக்க முடியாது. மற்றும் குடியிருப்பு வசதிகள், ரோடு வசதிகள் போன்று கிராமங்களில் பல திட்டங்கள் வகுத்து நல்ல முறையில் நடந்துவருகின்றன. அதை நான் பாராட்டுகிறேன். இந்த சர்க்காரால் பல திட்டங்கள், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டு நல்ல காரியங்கள் செய்யப்பட்டு வருகின்றன. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் இன்னும் பல நல்ல காரியங்களைச் செய்ய இந்த சர்க்கார் முயற்சி செய்துவருவது பாராட்டுக்குரியது.

கெஜட் பதிவில்லாத உத்தியோகஸ்தர்கள் குழந்தைகளுக்கு நான்காவது, ஐந்தாவது, ஆறாவது படிவங்கள் வரையில் படிக்கச் சலுகை கொடுக்கப்பட்டிருப்பது போல், கிராமாதிகாரிகளின் குழந்தைகளுக்கும் சலுகை கொடுக்கப்பட்டிருப்பதானது ஒரு நல்ல முக்கியமான அம்சம் என்று

புத்தகத்திலே நான் காண்கிறேன். அவர்கள் எல்லோரும் இந்த சர்க்காரை மிகவும் போற்றுவார்கள். அவர்கள் சார்பாக நான் எனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, எனக்கு இந்த வாய்ப்புக் கொடுத்த தலைவருக்கு எனது வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

* **Sri M. ETHIRAJALU** : மன்றத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையின் மீது சில வார்த்தைகள் சொல்வதோடு, முதலாவது இந்த நிதி நிலை அறிக்கையைத் தயார் செய்த நிதி அமைச்சரையும் இந்தச் சபை முதல்வரையும், அமைச்சர் அவையையும் நான் பாராட்டுகிறேன். ஏனென்றால், நாட்டின் நலத்தையொட்டியும், இந்த நாட்டில் வாழ்கின்ற மக்கள், இப்பொழுது விலைவாசிகள் உயர்வின் காரணமாக எவ்வாறு அவதிப்படுகிறார்கள் என்ற நிலையை உத்தேசித்தும், அதோடு மட்டுமல்லாமல், காங்கிரஸ் அரசாங்கம் என்ன செய்துகொண்டிருக்கிறது என்று எதிர்க் கட்சிக்காரர்கள் அல்லும் பகலும் அயராது பார்த்துக்கொண்டிருக்கும் நிலையை உணர்ந்தும்தான் இந்த வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் மட்டுமல்ல, இந்த மாநிலத்திலுள்ள மக்கள் அத்தனை பேரும் பாராட்டுகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்ற கவர்னர் உரை மீது நான் பேசும்போது, தென்னாற்காடு ஜில்லாவிலே கள்ளக்குறிச்சி தாலூகா போன்ற இடங்களில் பருவ மழை தவறியதன் காரணமாக அங்கே விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள் வரிவஜா செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டேன். நமது அமைச்சர் அவையிலே இருக்கும் மின்சார அமைச்சர் அவர்கள் சென்ற வாரத்திலே கள்ளக்குறிச்சிப் பகுதியில் மூன்று நாள் சுற்றுப்பிரயாணம் செய்து நாற்பது கிராமங்களைச் சுற்றிப் பார்த்து அங்குள்ள நிலையை அறிந்து சர்க்காருக்குத் தெரிவித்திருப்பார்கள் என்று நம்புகிறேன். அவரையும் பாராட்டுகிறேன்.

சென்ற ஆண்டிலே நமது வருவாய் 69 கோடி 49 லட்ச ரூபாய், செலவு 66 கோடி 84 லட்சம் ரூபாய். இந்த ஆண்டில் நமது வருவாய் 73 கோடியே 8 லட்சம் ரூபாய், செலவு 71 கோடியே 69 லட்சம் ரூபாய். சென்ற ஆண்டைவிட நமது வருவாய் உயர்ந்திருக்கிறது. அதன் காரணமாக நமக்கு உபரியாக ஒரு கோடி முப்பத்தொன்பது லட்சம் ரூபாய் நாம் அடைந்திருக்கிற காரணத்தால் நமது மாநிலத்தில் வேலை செய்யக்கூடிய ஊழியர்களுக்கும் குறிப்பாக ஆசிரியர்களுக்கும் பஞ்சப்படியாகக் கொடுத்து உதவியதுபற்றி நான் சர்க்காரை மிக மிகப் பாராட்டுகிறேன்.

இந்த நாட்டின் முன்னேற்றத்திலே, நாட்டின் வளத்தைப் பெருக்குவதற்குச் சென்ற ஆண்டிலே எல்லாத் துறையிலும் ஒதுக்கியதைவிட இந்த ஆண்டிலே கால்நடைகளுக்காக 8 லட்சம் ரூபாய், கால்நடைக் கல்லூரிக்காக 25 லட்சம் ரூபாய், மீன் வளத்தைப் பெருக்குவதற்காக மீனவர்களுக்கு பாப்லோ போட்டுகள் வாங்குவதற்காக 27 லட்சம் ரூபாய், விவசாயத்திலே பங்கு கொண்டிருக்கும் கிராமவாசிகளுக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக 16 கோடி ரூபாய் கொடுப்பதற்கும், இன்னும் பல துறைகளிலே சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு நிதி அதிகமாகக் கொடுக்கப்பட்டிருப்பதைப் பார்க்கும்போது, நிச்சயமாக யாரும் இந்த வரவு செலவுத் திட்டத்தைப் புகழ்ந்து பேசாமல் இருக்க முடியாது.

மேலும், சென்ற ஆண்டிலே பெரிய நீர்த் தேக்கத் திட்டங்களுக்காக ஒரு கோடியே 69 லட்ச ரூபாய் நமது ராஜ்ய சர்க்கார் செலவு செய்திருக்கிறார்கள். இந்த ஆண்டிலே வரவு செலவுத் திட்டத்திலே சுமார் 210 லட்ச ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். பெரிய பெரிய நீர்த் தேக்கத் திட்டங்கள் மூலமாகத்தான் உணவு உற்பத்தியை நாம் பெருக்க வேண்டும் என்ற நிலையை அறிந்தும் ஆனால், உணவு உற்பத்திப் பெருக்கம் என்று எண்ணும்போது பட்டி தொட்டிகளிலே உள்ள நிலங்களிலெல்லாம் உணவு உற்பத்தியைப் பெருக்கினால்தான் பூர்ண லக்ஷியத்தை அடைய முடியும் என்பதை உணர்ந்து, சென்ற ஆண்டு 70 லட்ச ரூபாய் வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கியிருந்தார்கள் சிறு நீர்ப்பாசனத் திட்டங்க

11th March 1959] **[Sri M. Ethirajalu]**

ளுக்காக. இப்பொழுது இந்த ஆண்டிலே 110 லட்சம் ரூபாய் ஒதுக்கி யிருக்கிறார்கள். ஆனால், சர்க்கார் கவனத்திற்கு நான் ஒன்றைக் கொண்டு வர ஆசைப்படுகிறேன். இந்தச் சிறு சிறு நீர்ப்பாசனத் திட்டங்கள் மூலமாகத் தான் கிராமத்தில் இருக்கும் நிலங்களும், பட்டிதொட்டிகளிலுள்ள நிலங் களும், நீர்த் தேக்கத் திட்டங்களினால் தண்ணீர் பாயக்கூடாத நிலங்களும் இன்றைக்கு உணவு உற்பத்தி செய்தால்தான் நாம் உணவுப் பற்றாக்குறை நிலையைவிட்டு, சுயதேவைப் பூர்த்தி என்கிற லட்சியத்தை அடைய முடியு யுமே தவிர, பெரிய பெரிய நீர்த்தேக்கத் திட்டங்களினால் மட்டும் அடைந்து விட முடியாது என்று நான் ஞாபகத்திற்குக் கொண்டுவருகின்றேன். அதற்காகச் சிறு பாசனத் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகையைக் கண்டி ராக்டர்களும் உத்தியோகஸ்தர்களும் பங்கு போட்டுக்கொண்டு, கடைசியாக ஆயக்கட்டுக்காரர்களை, ' நீ இவ்வளவு கொடுத்தால்தான் வேலை செய்ய முடியும் ' என்று சொல்லக்கூடிய நிலைக்கு சர்க்கார் விட்டுவிடக் கூடாது என்று நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். ஆனால், இந்தப் பணத்தை ஆயக்கட்டுதாரர்களிடம் கொடுத்து, அவர்கள் மூலமாக இந்தப் பணத்தைச் செலவழிக்க வேண்டும். அப்பொழுதுதான் நல்ல நிலை ஏற்படும், நாம் எதிர்பார்த்த சுயதேவையை எதிர்காலத்தில் அடைய முடியும் என்பதைச் சொல்லாமல் இருக்க முடியவில்லை.

அடுத்தபடியாக, நெய்வேலிபற்றி வரவு செலவுத் திட்டத்தில் இங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது. தென்னாட்டில் இந்த நெய்வேலித் திட்டத்தின் கீழ் பெரிய தொழிற்சாலை ஏற்படுவதின் காரணமாகத் தென்னாடே பொன் னாடாகும் என்ற நிலை நமக்கு நன்றாகத் தெரிந்திருக்கிறது. நெய்வேலி யானது தென்னாற்காடு ஜில்லாவில் அமைந்திருக்கிறது. அதை நாம் நன்றாக வளர்க்க வேண்டும், வாழ்த்த வேண்டும். அப்படி வாழ்த்தி னாலுங்கூட அங்கே இருக்கும் சில உத்தியோகஸ்தர்கள் உத்தியோகத் துறையில் கையாளுவதைப் பார்க்கும்போது, அதை ஒரு சர்வாதிகாரமாக அவர்கள் நடத்துகிறார்கள் என்று பொது மக்கள் பேசிக்கொண்டிருக் கிறார்கள். இது பொது மக்களிடத்தில் அதிருப்தியை ஏற்படுத்தியிருக்கிறது. 4-40 p.m. அதைப்பற்றிப் பல பத்திரிகைகள் தலையங்கம் எழுதியிருக்கின்றன என்ப தைத் தலைவர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்பு கிறேன். இதை நான் சொல்வதால் யாரையும் குறை கூறுகிறேன் என்று நினைக்கக் கூடாது. இதை ஆராய்ந்து பார்த்து இதில் அரசாங்கம் தலை யிட்டுச் சீர்திருத்த வேண்டும். உத்தியோக சம்பந்தமாக இந்த அரசாங்கத் திற்கும் கண்காணிப்பு வேண்டும். அந்தப் பொறுப்பு ராஜ்ய அரசாங்கத் திற்கு இருந்தாக வேண்டும். மத்திய சர்க்காருடைய கார்ப்போரேஷன் அதை நிர்வகித்தாலும் கூட அந்தப் பொறுப்பு ராஜ்ய அரசாங்கத்திடமும் இருக்க வேண்டும். இதை மத்திய சர்க்காருடைய கண்காணிப்புக்கே பூராவும் விடக் கூடாது. உத்தியோகங்களைக் கொடுக்கும் முறையில் அந்த மாவட்டத்தி லுள்ள மக்களுக்கு முதற்படியாகக் கொடுத்துவிட்டு அதன் பிறகு மற்ற வர்களுக்குக் கொடுக்கக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்த வேண்டும். குறிப்பாக தென்னாற்காட்டுப் பகுதியிலுள்ளவர்கள் பலர் உத்தியோகங்களில் இடம் பெற வேண்டும். இதை நமது சர்க்கார் நன்றாக உணர்ந்து அந்த அடிப் படையில் அங்குள்ளவர்களுக்கு உத்தியோகங்கள் கொடுக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, சேரி பராமரிப்புக்கு என்று 60 லட்சம் ரூபாய் ஒதுக்கப் பட்டிருக்கிறது. அதை அமுல் நடத்தும்போது முதன் முதலாகத் திருச்சி, சேலம், மதுரை போன்ற இடங்களில்தான் எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதைக் கண்டு மகிழ்ச்சி அடைகிறேன். அந்தப் பகுதிகளைத் தவிர இன்னும் ஜனத்தொகை அதிகப்படியாக இருக்கக்கூடிய சேரிகளும் இருக்கின்றன. அந்த இடங்களையும் உடனடி யாக எடுத்துக்கொள்ள வேண்டும். சேரி பராமரிப்பு என்று சொல்லி எவ்வளவோ ரூபாய் ஒதுக்கி வைத்துச் செலவு செய்தாலுங்கூட, சேரிவாழ் மக்களுக்கு இன்னும் வீடுகள் கிடைக்கவில்லை. கூரை வீடுகள் கூடக் கிடைக்க வில்லை. பல இடங்களில் வீடுகள் கட்டிக்கொள்வதற்கு இடம் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. ஏழை ஹரிஜனங்கள் எவ்வளவு மனுக் கொடுத் தாலும் வருஷக் கணக்கில் கேட்டும் அவர்களுக்கு இடம் கிடைக்கவே

[Sri M. Ethirajalu] [11th March 1959

இல்லை. நாலைந்து வருஷங்களாகக் கேட்பவர்கள் எண்ணிறந்தவர்கள் இருக்கிறார்கள். இதற்காக சர்க்கார் பணம் ஒதுக்கவில்லையா? அல்லது உத்தியோகஸ்தர்கள் அதை அமுல் நடத்துவதில் ஏதாவது கோளாறுகள் இருக்கின்றனவா? அவைகளையெல்லாம் ஆராய்ந்து பார்க்க வேண்டியது சர்க்கார் கடமை. அப்படிப் பார்க்கும்போது நிலம் கிடைப்பதில்தான் தாமதம் ஏற்படுகிறது. அந்த நிலைமையை மாற்றுவதற்கு சர்க்கார் வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும். சாதாரணமாக நிலத்தை எடுத்துக்கொள்வதற்கு இப்பொழுது ஒரு வருஷத்திற்கு மேலாகிறது. விவசாயத் துறையில் சர்க்கார் நிலத்தை எடுத்துக்கொள்ளவேண்டுமானால், அதற்கு என்று தனியாக ஒரு சட்டம் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அதாவது **Requisitioning and Acquisition of Immovable Property Act, 1956.** இதன்படி சர்க்கார் யாருடைய நிலத்தை வேண்டுமானாலும் இரண்டு மாதங்களுக்குள் எடுத்துக்கொண்டுவிடலாம். ஏன் அந்தச் சட்டத்தை ஹரிஜனங்களுக்கு நிலம் வாங்குவதற்கு உபயோகிக்கக் கூடாது என்று கேட்கிறேன். அப்படி உபயோகித்து இரண்டு மாதங்களில் நிலத்தை எடுத்து வீடு கட்டிக் கொடுக்கலாம். அந்தச் சட்டத்தை அமுல் நடத்தாமல் இருந்தால் கட்டாயமாக இன்னும் பல ஆண்டுகளானாலும் கூட ஹரிஜனங்களுக்கு குடியிருப்பு வசதி கிடைக்கப் போவது இல்லை. அப்படி இல்லாவிட்டால் இன்னும் 100, 100 வருஷங்கள் ஆனாலும், எவ்வளவு பணம் செலவு செய்தாலும் ஹரிஜனங்களின் குறைகளை வீடுகள் விஷயத்தில் திருப்தி செய்ய முடியாது. குடி தண்ணீர் வசதி கிடைக்காது, ரோடு வசதி கிடைக்காது, செத்துப்போனால் பிணத்தைக் கொண்டு போய்ப் புதைப்பதற்குக் கூட நிலம் கிடைக்காது. எங்கு பார்த்தாலும் இப்படிப்பட்ட நிலை மேலும் இருந்துகொண்டு தானிருக்கும். ஆகவே, இந்த முறையை அகற்ற வேண்டும், அதற்கு இந்தச் சட்டத்தை உபயோகிக்க வேண்டும். ஆகவே, அந்தச் சட்டம் இவர்களுக்கு நிலம் வழங்குவதற்கு உபயோகிக்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, இதில் பின் தங்கிய இனத்தவர்களுக்கு சென்ற வருஷத்தில் நமது ராஜ்யத்தில் 233 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருந்ததாகவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், இந்த ஆண்டில் 234 லட்சம் ரூபாய் அதாவது ஒரு லட்சம் ரூபாய்தான் அதிகமாக ஒதுக்கியிருக்கிறது. இதில் என்ன குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால்—

'சோஷலிச சமுதாயத்தை லட்சியமாக ஏற்றுக்கொண்டிருக்கும் நிலையில் சமுதாயத்தில் பின் தங்கிய வகுப்பினரை முன்னுக்குக் கொண்டு வரத் தனி முயற்சிகள் எடுக்கப்படவேண்டுமென்பதுபற்றி வலியுறுத்த வேண்டிய அவசியம் இல்லை.' என்றும் சொல்லியிருக்கிறார்கள், பின் தங்கிய இனத்தவர்களை முன்னுக்குக் கொண்டுவர சோஷலிச அடிப்படையில் ஏதாவது அவர்களுக்குச் செய்திருக்கிறார்களா என்று கேட்டால், பெருங்காயத்தைச் சமுத்திரத்தில் கரைத்ததுபோல்தான் இருக்கிறது. அவர்களுக்கு இப்பொழுது ஒதுக்கப்பட்டிருக்கும் பணம் அந்த அடிப்படையில்தான் இருக்கிறது. கடந்த ஆண்டு 233 லட்சம் ரூபாயும் இந்த ஆண்டு 234 லட்சம் ரூபாயும் ஒதுக்கி வைத்தால் மட்டும் அவர்களை முன்னுக்குக் கொண்டுவந்துவிட முடியுமா என்று கேட்கிறேன். இதுவரை பொருளாதாரத் துறையிலோ அல்லது கல்வித் துறையிலோ அவர்கள் முன்னுக்கு வந்திருக்கிறார்களா? வாழையடிவாழையாக அவர்கள் எந்த அடித்தளத்தில் இருந்தார்களோ அந்த அடித்தளத்தில்தான் இப்பொழுதும் இருந்துகொண்டிருக்கிறார்கள். அன்று யார் உச்ச நிலையில் இருந்தார்களோ அவர்கள்தான் இன்றைக்கும் உச்ச நிலையில் மேலும் போய்க்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குத்தான் இன்னும் உச்ச நிலைக்குப் போவதற்கு உதவி அளிக்கப்பட்டு வருகிறது. அடித்தளத்தில் இருக்கக்கூடியவர்கள் உச்ச நிலைக்கு வருவதற்கு இந்த ராஜ்யத்தில் எந்தவிதத்திலாவது நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்களா என்று பார்த்தால் இல்லவே இல்லை என்றுதான் சொல்லவேண்டும். உச்ச நிலையில் இருக்கக் கூடியவர்களுக்குத்தான் அதிகப்படி

11th March 1959] [Sri M. Ethirajalu]

யான சலுகைகள் காட்டப்படுகின்றன. சோஷலிச சமுதாயத்தைக் கடைப் பிடிக்கிறோம் என்று சொன்னால், இந்த நிலையை மாற்றுவதற்கு உடனடியாக சர்க்கார் நடவடிக்கை எடுத்துக்கொண்டு அதை மாற்றி அமைக்க முன்வரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். பின் தங்கிய இனத்தவர்கள் முன்னுக்கு வரத் தனிச் சலுகைகள் காட்ட வேண்டாமா? நான் சொல்வது பொய் இல்லை. நான் சொல்வதை என்னால் நிரூபிக்க முடியும் என்று சொல்லுகிறேன். பின் தங்கிய இனத்தவர்கள் எந்தத் துறையிலும் எந்தவிதத்திலும் முன்னேற்றமடையவில்லை. எந்தவிதமான பலனையும் அடையவில்லை. அழுத பிள்ளைதான் பால் குடிக்கும் என்ற அடிப்படையில் இதைச் சொல்லுகிறேன். பின் தங்கியவர்கள் அப்படியே மிக மிகத் தாழ்ந்த நிலையில் இருக்கிறார்கள். அடுத்தபடியாக, பின் தங்கிய இனத்தவர்களுக்கு இதுவரை வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றனவா? குடியிருப்பு வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறதா? இல்லவே இல்லை. சென்ற வருஷம் 7,750 வீடுகள் கட்டிக் கொடுக்கத் திட்டமிட்டதாகச் சொல்லப்படுகிறது. பின் தங்கிய இனத்தவர்களில் எவ்வளவோ பேர்கள் தொழிலாளர்களாக மாறியிருக்கிறார்கள். அவர்களுக்கு ஏதாவது கட்டிக்கொடுக்கப்பட்டிருக்கிறதா? எங்கேயாவது அவர்களுடைய நிலை உயர்ந்திருக்கிறதா? அப்படி ஒன்றுமே இல்லை என்பதை நான் மிக வருத்தத்துடன் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த முறை மாற வேண்டும். அப்படி மாறினால்தான் சோஷலிச சமுதாய அமைப்பை மக்கள் ஏற்றுக்கொள்ள முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, ஒரு வார்த்தையை மட்டும் தெரிவித்துக்கொள்ளுகிறேன். பொது மக்களுக்குத் தொழில் செய்யக்கூடிய சலவைத் தொழிலாளர்களின் முக்கிய வேண்டுகோள். அவர்களுக்கு எந்தவிதமான சலுகையும் இது வரையிலும் இந்த அரசாங்கத்திடமிருந்து கிடைக்கவில்லை. பொது மக்கள் நல்ல நிலையில் சாதாரணமாக வாழ்வதற்கு அவர்களுடைய தொழில் முக்கியமாக இருக்கிறது. அவர்களுடைய நிலை இன்றைக்கு எப்படி இருக்கிறது என்றால், அவர்களுடைய தொழிலை நடத்துவதற்கு வேண்டிய சலவைச் சோடா அதிக விலையில் விற்கப்படுகிறது. அதன் விலை இப்பொழுது ரூ. 1–8–0 விற்பதைப்பற்றி அரசாங்கம் நடவடிக்கை எடுக்காமல் ஏன் சும்மா இருக்கிறது? கவர்னர் அவர்களுடைய உரையின் மீது நான் பேசும்போதுகூட இதைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறேன். இப்படி விலை ஏறி இருப்பதால் சலவைத் தொழிலாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே அதன் விலையை உடனே நிர்ணயிக்கவேண்டும். இதைப் பற்றி ஸ்டேட் ட்ரேடிங் கார்ப்பொரேஷனைக் கேட்டால் இதன் விலையை நிர்ணயிப்பது மாநில சர்க்கார்தான் என்று சொல்லுகிறார்கள். அதனால் இந்தக் கஷ்டத்தை நீடித்துக்கொண்டே இருப்பதன் காரணம் என்ன? மற்றொன்றும் சொல்லிக்கொள்கிறேன். திருநெல்வேலி ஜில்லாவில் ஆறுமுகநேரி என்ற இடத்திற்குப் பக்கத்தில் தாரங்கதாரா சோடா பாக்டரி ஒன்று ஆரம்பிக்கப் போகிறது. அங்கே காஸ்டிக் சோடாதான் தயாரிக்கப் போவதாகச் சொல்கிறார்கள். மத்திய சர்க்காருடைய பேருதவியின்பேரிலும் மாநில சர்க்கார் சிறு உதவியின் பேரிலும் ஆரம்பிக்கப்படுகிறது. அவர்களை வாஷிங் சோடாவை உற்பத்தி செய்ய முடியாதா என்று கேட்டதற்கு நமது மாநில சர்க்கார் அதற்கு ஆதரவு கொடுத்தால் உற்பத்தி செய்யத் தயாராக இருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். ஆகவே, அதற்கு உடனடியாகத் தொழில் அமைச்சர் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். இங்கே உற்பத்தி செய்தால், வெளி நாட்டிலிருந்து அதைத் தருவிக்க வேண்டிய அவசியம் இல்லை. அதனால் அதை நம்பி வாழக்கூடிய லக்ஷக்கணக்கான மக்களுக்குக் குறைந்த விலையில் சோடா கிடைக்கும். இதை உடனடியாகச் செய்ய சர்க்கார் முன்வர வேண்டும். ரூ. 1–8–0 கொடுத்து அவர்களால் வாங்க முடியவில்லை. முப்பது கோடி மக்கள் இவர்களை நம்பி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இதை முக்கியமாகக் கருதி இதை நம்பி இருக்கக் கூடிய எழு லட்சம் தொழிலாளர்களுக்கு நன்மை அளிக்கும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

கடைசியாக . . .

[11th March 1959

DEPUTY CHAIRMAN : கடைசியாக இல்லை. அடுத்த அங்கத்தினர், ஸ்ரீ சுதர்சனம் நாயுடு.

SRI M. V. SUDARSANAM NAIDU : கனம் தலைவர் அவர்களே, நமது வரவு செலவுத் திட்டத்தைப்பற்றிப் பேசும்போது, எல்லோரும் ரொம்பப் போற்றி அழகாகப் பேசினார்கள், புகழ்ந்தார்கள். நானும் அப்படித்தான் சொல்ல வேண்டியதாக இருக்கிறது. ஏனென்றால் இன்றைய தினம் நமது அரசாங்கம் மக்களுக்கு வரி போடாமல் விட்டதனால் மக்களுக்கு ஒரு திருப்தி ஏற்பட்டிருக்கிறது. ஆனால் அதில் ஒரே ஒரு விஷயத்தை மட்டும் நான் சொல்லிக்கொண்டு சீக்கிரமாக முடித்துக்கொள்ளுகிறேன். சென்ற பட்ஜெட்டில் ஒருவிதமாக சீர்படுத்தி ஒருவிதமாக ஒப்புக்கொண்டோம். இந்த பட்ஜெட்டையும் சந்தோஷமாக ஒப்புக்கொண்டிருக்கிறோம். நாட்டின் முன்னேற்றத்தில் அக்கறை காட்டிப் பெருமைப்படுபவர்களில் நானும் ஒருவன்.

4-50 p.m. இப்பொழுது நமது அரசாங்கம் அநேக வேலைகளைச் செய்துவருகிறார்கள். கிராமங்களிலும் சரி, நகரங்களிலும் சரி அவர்கள் அநேக நல்ல காரியங்களைச் செய்து வருகிறார்கள். அரிப்புத் திட்டம் என்று சொல்லி எங்கெங்கு தண்ணீர் அரிக்கிறதோ அங்கெல்லாம் பெருவாரியாக மூலதனம் செலவு செய்து அந்த அரிப்பு அரிக்காதபடி நகரங்களிலும், கிராமங்களிலும் பாதுகாக்க வேண்டுமென்பதற்காக அரசாங்கம் சென்ற பல வருஷங்களாக அந்தத் திட்டத்தை நிறைவேற்றி வருகிறார்கள். ஒரு புறத்தில் நிறைவேற்றுகிறோம். மற்றொரு புறத்தில் கவனிப்பது கொஞ்சம் குறைவாக இருக்கிறது. இந்த ஆறுகள் ஓடும் இடங்களில் அரிப்புகள் ஏற்படுவதால் பல இடங்கள் பாழ்படுத்தப்படுகின்றன. எல்லா ஜில்லாக்களிலும் இந்த அரிப்பு இருக்கிறது. குறிப்பாக, இந்த ஆற்றினுடைய ஓடைகள் அதிகமாக அரிப்பதினால் பல இடங்கள் பாழ்படுத்தப்படுவதை நான் பல கட்டத்திலிருந்து உணர்ந்திருப்பதால், அதைத் தடுக்க அரசாங்கம் முற்பட வேண்டும் என்று வற்புறுத்த விரும்புகிறேன். குறிப்பாக, எங்கள் ஜில்லாவில் கடலூரில் முனிசிபல் ஏரியாவில் கெடிலம் பெண்ணையாறு அரிப்பு டவுனுக்குப் பெரிய பாதகமாக இருக்கிறது. அந்த டவுனில் இருக்கிற முனிசிபல் கமிஷனரிடம் இதை எடுத்துச் சொன்னேன். அதுபற்றி நடவடிக்கை எடுக்கும் பொறுப்பு அவர்களைச் சேர்ந்ததல்ல என்று கூறிவிட்டார்கள். இதை யார் பராமரிப்பது என்று கேட்டால் பதில் இல்லை. குறிப்பாக, ஆங்காங்கு ஆறுகள் ஓடுகிற இடத்தில் மேடான பகுதியில் சூளை போட்டுச் செங்கல்லைச் சுடுகிறார்கள். அந்தமாதிரிச் செய்வதன் காரணமாக, அந்த மேட்டுப் பகுதி பள்ளமாகிவிடுகிறது. கடலூர் முனிசிபாலிடியில் அதாவது பெரிய ஆஸ்பத்திரி பக்கத்தில் 2 பர்லாங்குக்குச் சூளை போடுகிறார்கள். அதன் காரணமாக மஞ்சக்குப்பம், புதுப்பாளையம் இரண்டும் அரிப்புக்கு ஆளாகி நகரம் பாழாகிவிடும்.

கமிஷனரிடம் சொன்னபோது, அவர்கள் அதைக் கவனிக்கவில்லை. அவர் பி.டபிள்யூ.டி.-க்குச் சொல்லுங்கள் என்கிறார்கள். அவர்களைக் கேட்டால், எங்களுக்குச் சம்பந்தம் இல்லை, ரெவின்யூ டிபார்ட்மெண்டைக் கேளுங்கள் என்று சொல்லுகிறார்கள். யார் பொறுப்பில் இருக்கிறது என்பதை உணர முடியவில்லை. இந்த மாதிரி இருக்கும்போது உடனடியாக நடவடிக்கை எடுத்துப் பாதுகாக்கக் கடமைப்பட்டிருப்பது நாம்தான். மக்களுக்குப் பெரும் வெள்ள காலத்தில் ஏற்படும் பலவிதமான கஷ்ட நஷ்டங்களைப் பார்த்து நாம் அவதியுறுகிறோம். அம்மாதிரி நிலைமைகள் ஏற்படாமல் பார்க்க வேண்டுமென்றால் யாரும் கவனிப்பதில்லை. அவைகள் நகரலிமிட்டில் இருக்கின்றன. ஆனால் கவனிப்பதில்லை. அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அடுத்தபடியாக, இப்பொழுது எங்கு பார்த்தாலும் பஞ்சத்தைப்பற்றிப் பேசிக்கொண்டே வருகிறோம். முன்பு கூடச் சொன்னேன், எங்கள் மாவட்டத்திலுள்ள ஐந்தாறு தாலூகாக்களில் பஞ்ச நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்று. சில இடங்கள் ரொம்பப் பாதிக்கப்பட்டிருக்கின்றன. திண்டிவனம், செஞ்சி, விருத்தாசலம், கள்ளக்குறிச்சி போன்ற இடங்களில் ஆங்காங்கு பஞ்சம் இருக்கிறது. அதற்கு உடனடியாகத் தக்க பரிகாரம் தேடவேண்டும்.

11th March 1959] [Sri M. V. Sudarsanam Naidu]

நேற்று வைத்தியத்தைப்பற்றி ரொம்ப அழகாக எல்லோரும் பேசினார்கள். நான் கூட ரொம்பக் கூர்ந்து கவனித்தேன். எல்லாம் பேசுகிறார்கள். ஆனால் அனுபவபூர்வமாக வந்த நாட்டு வைத்தியத்தை விட்டுவிட்டார்கள். ஒரு அணா, 1½ அணா செலவிலேயே நாட்டு வைத்தியத்தின் மூலமாக வியாதிகள் குணமாகிக்கொண்டிருந்தன. அந்த மருந்தால் வியாதி சுலபத்தில் சொஸ்தமாகிவிடும். அந்தமாதிரி நாட்டு வைத்தியத்தை நன்றாகத் தெரிந்து வைத்திருந்த வயதானவர்களிடமிருந்து நம்முடைய கவனக் குறைவால் அந்தத் தொழிலைத் தெரிந்து கொள்ளும் வாய்ப்பை இழந்துவிட்டதால் இன்று அந்தத் தொழிலைக் கைவிட வேண்டியவர்களாகிவிட்டோம். இப்பொழுது கடலூரில் இருக்கும் ஆஸ்பத்திரியில் நெருக்கடி ஜாஸ்தியாக இருக்கிறது. அங்கு இருக்கும் உத்தியோகஸ்தர்கள், மருந்து கொடுப்பவர்கள் எல்லோரும் மக்களை உதாசீனப்படுத்துகிறார்கள். நெருக்கடி அதிகமாக இருக்கிற காரணத்தினால், அங்கு வேலை பார்ப்பவர்களுக்கும் சலிப்பு ஏற்படுகிறது. ஆஸ்பத்திரிகளில் இருக்கக்கூடிய நெருக்கடியைத் தவிர்க்கப் போதுமான அளவுக்கு டாக்டர்களையும், உத்தியோகஸ்தர்களையும் போட வேண்டும். டாக்டர்கள் நல்ல விதமாக, அமைதியாகப் பணி புரிய வேண்டுமென்று அரசாங்கம் நிபந்தனை இட வேண்டுமென்பது என்னுடைய வேண்டுகோள். நான் அவர்கள் பேரில் குற்றம் சொல்லவில்லை. மக்கள் அவதியைப் பார்க்கும்போது அந்தமாதிரிச் சொல்ல வேண்டி இருக்கிறது.

எல்லோரும் காச நோய் (டி.பி.) பற்றிச் சொன்னார்கள். நான்கு 5 லட்ச ரூபாய் செலவு செய்து கேம்பர் மலைப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட ஆஸ்பத்திரி சும்மாக் கிடக்கிறது. அதை அரசாங்கம் எடுத்து நடத்தினால் கவனிக்க முடியும். யாரோ கட்டினார்கள். யாரோ பராமரிக்கிறார்கள். அரசாங்கம் ஏதோ கொஞ்சம் உபகாரம் பண்ணினார்கள். ஒன்றும் பிரயோஜனம் இல்லை. 100, 150 பேருக்காவது வைத்தியம் பண்ண முடியும். அதை அரசாங்கம் எடுத்துக்கொள்ளவில்லை என்றால் ஒன்றும் செய்ய முடியாது. ஆகவே, அரசாங்கம் அதை எடுத்து நடத்த வேண்டும். "கண்ட்ரோல்" அரசாங்கம் வைத்துக்கொள்ள வேண்டும். அந்த இடம் மலைப்பகுதியில் அமைந்திருக்கிறது. அந்த இடத்தில் இருந்தால் இயற்கையாகவே வியாதி சொஸ்தமாகிவிடும். இதை அரசாங்கம் உடனடியாகக் கவனித்து நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். மக்களுடைய குறைகளைச் சரியானபடி கவனிக்கவில்லை என்ற ஒரு எண்ணம் எனக்கு அடிக்கடி வருகிறது. மக்களுக்குக் கட்டுப்பட்டிருக்கிறேன் என்று சொல்லிக் கொண்டு உங்களுக்குச் சிரமம் கொடுக்காமல் பின்னால் சந்தர்ப்பம் கிடைத்தால் பேசிக்கொள்கிறேன் என்று கூறி, எனக்குப் பேசச் சந்தர்ப்பம் கொடுத்ததற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(Mr. Chairman in the Chair.)

SRI K. V. RAMASWAMY: கனம் அவைத் தலைவர் அவர்களே, இப்போது கடைமாணக்கனாக இன்று எனக்குப் பேச அனுமதி கொடுத்திருப்பதானது எனக்கு மிக்க பெருமையைக் கொடுத்திருக்கிறது. என்னைப் பொறுத்த வரையில், பள்ளி அளவிலும் கூட பள்ளிக்கூடம் ஆரம்பத்திலிருந்து விடுகிற வரைக்கும் ஒவ்வொரு நாளைக்கும் சீக்கிரத்தில் வந்து, கடைசியாகப் போவதில் பழக்கப்பட்ட தன்மையில் இன்றைக்கும் "நீ கடைசியாகப் பேசு" என்று தாங்கள் அனுமதி கொடுத்திருப்பது அத்தகைய பெருமையை உணர்ந்து செய்திருப்பதாக நினைந்து மகிழ்ச்சி அடைகிறேன். 5 p.m.

அடுத்து, இப்போது சபை முன்பு விவாதத்தில் இருக்கிற 1959-60-ம் வருஷத்திய நிதி நிலை அறிக்கையைப்பற்றிப் பல பெரியவர்களும், அரியவர்களும் மிகமிக அழுத்தந்திருத்தமாகப் பல கருத்துக்களைக் கூறிய பிற்பாடு நான் பேசுவது என்பது மிகையாகத்தான் இருக்கும். நான் சொல்ல வந்த விஷயங்களை எல்லாம், என்ன வற்புறுத்த வேண்டுமென்று நினைத்திருந்தேனோ அவைகளை எல்லாம் எனக்கு முன் பேசியவர்கள் கொள்ளை கொண்டுபோய்விட்டார்கள். மீதி என்ன பேசுவது என்பது தெரியாமல் நான் பேசுகின்றேன்.

இந்த பட்ஜெட்டை மிகமிகச் சந்தோஷத்தோடு நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏன் அதைப்பற்றி அவ்வளவு சந்தோஷப்பட வேண்டுமென்ற வியப்பு ஒவ்வொருவருக்கும் இருக்கலாம். அதற்குச் சில காரணங்களை உங்கள் முன்பு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய நாட்டிலே எவ்வளவோ காலம்தொட்டு பல அரசர்கள் ஆட்சி புரிந்து வந்தார்கள். அப்புறம் வெள்ளையர்களின் ஆட்சியும் இங்கே நடந்திருக்கிறது. அப்போது இந்தமாதிரி ஒரு மன்றமும் பலகாலமாக இருந்து வந்திருக்கிறது. அதில் மக்களுக்குச் சேவை செய்ய வேண்டுமென்ற, மக்களுக்குத் தொண்டு செய்யவேண்டுமென்ற ஆர்வம் கொண்ட பல பெரியவர்கள் வீற்றிருந்திருக்கிறார்கள். இன்றைக்கு நம் சபையில் இருக்கக்கூடிய பெரியவர்களில் ஒரு சிலரும் கூட வெள்ளைக்காரர்களுடைய காலத்து ஆட்சி மன்றத்தில் வீற்றிருந்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். அப்பொழுதெல்லாம் அவர்கள் செய்ய நினைப்பதற்கும் அரியதான, காண்பதற்கும் அரியதான சில காரியங்களை இன்று நாம் நம் கண் முன்பாகப் பிரத்யட்சமாகக் காணும்படியாக இந்த சர்க்கார் சில வருஷங்களுக்குள்ளேயே செய்திருக்கிறது என்றால் யாருக்குத்தான் சந்தோஷம் ஏற்படாது, யார்தான் இவர்களுடைய பட்ஜெட்டைச் சந்தோஷமாக வரவேற்கமாட்டார்கள் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இன்று பாருங்கள். நம் நாட்டிலே அந்தக் காலத்திலே யாராவது இத்தனை அணைக்கட்டுகள் கட்டினார்களா ? காங்கிரஸ் ஆட்சி ஏற்பட்டவுடன் தான் காவேரியாறு உண்டாகவில்லை. காங்கிரஸ் ஆட்சி ஏற்பட்டவுடன் தான் மணிமுத்தாறும், ஆரணியாறும் ஓட ஆரம்பிக்கவில்லை. அப்போது இருந்த ஆறுகள்தான், அப்போது இருந்த நீரோட்டங்கள்தான், அப்போது இருந்த ஓடைகள்தான். ஆனால் அவைகளின் போக்கையே திருப்பி விடக்கூடிய அளவில், அவற்றின் தண்ணீரை எல்லாம் சொட்டுக்கூட சேதமில்லாமல் நாட்டை வளப்படுத்துவதற்கு உபயோகப்படுத்திக்கொள்ளும் முறையில் நம்முடைய சர்க்கார்தான் இன்றைக்குப் பலப்பல திட்டங்களைப் போட்டு நிறைவேற்றியிருக்கிறார்கள். பணம் எல்லாத் திட்டங்களுக்கும் கிடைப்பது மிகமிகக் கஷ்டமாக இருந்தபோதிலும் கூட, கஷ்டத்தைச் சமாளித்து, வெளி நாடுகளிலிருந்து கடனை வாங்கியாவது நம் மக்களுக்கு நாட்டு மக்களுக்குச் சேவை செய்திருக்கிறார்கள். இரவு பகல் பாராமல் அல்லும் பகலும் மிகக் கடுமையாக உழைத்து இந்தத் திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறார்கள். மேலும் பல திட்டங்களைப் போட்டுக்கொண்டு சலிப்பு இல்லாமல் இன்றைக்கு நம் சர்க்கார்தான் தலைமேற்கொண்டு நடத்தி வருகிறார்கள் என்பதை மிகமிகப் பெருமையோடு சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

நீங்கள் பார்க்கலாம். அணைக்கட்டுகள் எத்தனை, கல்லூரிகள் எத்தனை, இன்னும் தொழிற்சாலைகள் எத்தனை ? இவைகள் எல்லாம் நம் ராஜ்யத்தில் ஏற்படுத்தப்பட்டு வருகிறதென்றால், இவை எல்லாம் நம் ராஜ்யத்தின் வளர்ச்சிக்கு இன்றியமையாதவை. அங்கங்கே பலபல அபிவிருத்தித் திட்டங்களை நாம் போட்டு வேலை செய்து வரும்போது, ஒன்றிரண்டு குறைபாடுகளும் இருக்கலாம். உண்மையை உணர்ந்துகொள்ளாமல், நம்மில் அநேகம் பேர்களும் "ஆ. . . என்ன ஐயா பண்ணுகிறீர்கள் ?" என்று அலட்சியமாகவும் பேசலாம். சொல்வது எளிது. ஆனால் இப்போது செய்யப்பட்டிருக்கும் காரியங்களில் ஒரு துளி செய்வது என்றாலும் மிகமிக அரிது. இவ்வளவு காரியங்கள் இந்தக் காலத்தில் செய்யப்பட்டிருக்கின்றன என்றால், இது மிகமிகப் பிரமாதம் என்றுதான் சொல்ல வேண்டும். சாதாரண ஒரு குடும்பத்தில் மனைவி, குழந்தை இவர்களைத் திருப்தி செய்துகொண்டு நம்மால் சில காரியங்களைக் கூடச் செய்ய முடியவில்லை. நம் நாட்டிலே எத்தனை ஆயிரம் மக்கள், எத்தனை ஜில்லாக்காரர்கள், அதிலும் அந்த மக்களிடத்திலே தான் எத்தனை தினுசுகள் ! இந்தத் தினுசுகளையெல்லாம் ஒரு தினுசாக ஒன்றுபடுத்திச் சேர்த்துப் பல காரியங்களைச் செய்வது என்றால், அது சாமானிய விஷயமல்ல. அந்த முறையில் இந்த அரசாங்கம் போய்க் கொண்டிருக்கும்போது பராட்டாமல் இருக்க முடியாது.

11th March 1959] [Sri K. V. Ramaswamy]

நம் நாட்டில் நல்ல அபிவிருத்தியை அடைய வேண்டியது விவசாயம்தான். விவசாயம் நல்ல முறையில் நடைபெற்றால்தான், மக்கள் சுபிட்சமாக வாழ முடியும் என்பதை நான் பலமுறை இந்தச் சபையில் சொல்லியிருக்கிறேன். இத்தனை அணைக்கட்டுகளும், எதற்குப் பயன்படும் ? விவசாயம் நல்ல முறையில் நம் ராஜ்யத்தில் நடப்பதற்குப் பயன்படும். விவசாயப் பெருக்கத்திற்கு என்றால் மக்களுடைய சுபிட்சத்திற்கு என்றுதான் ஆகிறது.

இந்த அணைக்கட்டுகளில் பல குறைபாடுகள் அங்கங்கே இருக்கும். அதிகாரிகளும் சில ஒழுங்கீனமான காரியங்களைச் செய்திருக்கிறார்கள். இப்படி இந்த விஷயம் கசமுசாவாகத்தான் இருக்கும். அதனால் நாட்டின் முன்னேற்றம், அணைக்கட்டுத் திட்டம் பாதிக்கப்படாது. நல்ல முறையில் திட்டம் நடைபெறுவதோடு கூட தவறு இழைக்கக்கூடிய இடத்திலும் அதற்குத் தக்க நடவடிக்கையை அவ்வப்போது எடுப்பதற்கு இந்த அரசாங்கம் தயங்கவில்லை.

அதோடு இன்றைய தினம் எனக்கு முன்னால் பேசியவர்களும் கூட புது வரிகள் இல்லாமல் பட்ஜெட் தயாரிக்கப்பட்டிருப்பதை—எதிர்க் கட்சிக்காரர்களும் கூட—பாராட்டியிருக்கிறார்கள். நான் இந்த விஷயத்தில் பாராட்டக் கடமைப்பட்டவன் அல்ல என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். காரணம் என்னவென்றால் வரி போடலாம். மக்களுக்கு இன்னும் பல நல்ல காரியங்களைச் செய்ய வேண்டுமென்றால், இன்னும் அதிகப் பணம் வேண்டும். பணம் இல்லாது எப்படி நல்ல திட்டங்களைப் போட முடியும் ? டிக்கெட் இல்லை, எல்லோரும் சினிமாவுக்கு போகலாம் என்று விட்டுக்கொண்டே இருந்தால் பலரும் பார்க்கலாம். ஆனால் எத்தனை நாளைக்கு அப்படிக் காட்ட முடியும் ? அங்குள்ளவர்கள் எப்படி அதை நடத்த முடியும் ? சும்மாக் காட்டுவானா சினிமா ? அந்த முறையில் வரி அத்தியாவசியம். ஆனால் மக்களிடத்திலிருந்து வாங்கக்கூடிய வரிப் பணம் நல்ல முறையில் பயன்படுகிறதா என்பதை ஆராய்ந்து அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டியது மக்களது கடமையாகும், நம் போன்ற மெம்பர்களுடைய கடமையாகும்.

நாம் பெற்ற சுயராஜ்யம் ராமராஜ்யமாக மாறிவிட்டது என்று சொல்லிக்கொள்ளக்கூடிய காலம் வர வேண்டுமானால், இங்குள்ள அனைவருக்கும் உண்ண உணவும், உடுக்க உடையும், தன்னம்பிக்கையோடு தன்மானத்தோடு வாழ வகையும் செய்து கொடுத்தாக வேண்டும். எனக்குப் பத்து ஏக்கர் சொந்தமாக இருக்கிறது என்றால், இன்றைய தினம் நான் யார் கையையும் எதிர்பார்க்காமல் சுகமாக வாழ்கிறேன். எனக்குக் கீழே ஒருவன் இருந்தால், அவன் மிகவும் கஷ்டப்பட்டு உழைத்து ஜீவிக்க வேண்டியதாக இருக்கிறது. வாழ்க்கைக்குப் போதுமான ஊதியம் இல்லாலாத காரணத்தினால், வசதியுள்ளவர்களிடத்தில் அவர்கள் அடங்கி, ஒடுங்கி, ஐயா ஐயா என்று பல்லைக் காட்டிக் கெஞ்சி நிற்கக்கூடிய நிலைமை இருக்கிறது. இப்படிப்பட்ட இழிந்த நிலை சுதந்திர நாட்டில் இல்லாதவாறு, ஒவ்வொருவரும் தலை நிமிர்ந்து தன் கடமையைச் செய்து வாழ வேண்டுமானால், ஒவ்வொருவருக்கும் போதுமான வருவாய் கிடைக்க வேண்டும். உதாரணமாக, கணக்குப் பிள்ளையை எடுத்துக்கொள்ளுங்கள் —சின்ன வருவாய். மணியக்காரரை எடுத்துக்கொள்ளுங்கள்—சின்ன வருவாய். பியூன்களை எடுத்துக் கொள்ளுங்கள்—சின்ன வருவாய். கான்ஸ்டபிள்களை எடுத்துக்கொள்ளுங்கள்—சின்ன வருவாய். இவர்களுக்குப் போதுமான ஊதியம் கொடுத்து இவர்களும் மனிதர்களாக வாழ வகை செய்யவேண்டும். அப்படிச் செய்வதுதான் நாம் சுதந்திரம் பெற்றதற்கு அறிகுறி என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயமாகும்.

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்
வீணில் உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்."

என்று பாடியிருக்கிறார் பாரதியார். இன்றைக்கு நம் நாடு முன்னேற்றம் அடைய வேண்டுமானால், சாதம் சாப்பிடுகிற ஒவ்வொரு மனிதனும், உணவு தின்பதற்கு வாய்படைத்த ஒவ்வொரு மனிதனும், இந்த நாட்டில் உள்ள விவசாயிகள் அத்தனை பேரும் உழைப்புக்கேற்ற ஊதியம் பெற்று

[Sri K. V. Ramaswamy] [11th March 1959

நன்றாக வாழ வேண்டும் என்று நினைக்கவேண்டும். அவர்கள் வாழ்ந்தால் தான் விவசாயம் வாழும். விவசாயம் வாழ்ந்து வளர்ந்தால்தான், நமக்குச் சோறு கிடைக்கும். நாட்டில் பஞ்சம் இருக்காது. நாடு முன்னேற்றம் அடையும். இல்லாவிட்டால், விவசாயி முன்னேற மாட்டான், விவசாயம் முன்னேறாது.

நாம் விவசாயிகளுக்கு எல்லா நன்மைகளையும் செய்ய வேண்டும். மின்சாரம் சம்பந்தமாக, கனம் மின்சார அமைச்சரிடம் நான் பல விஷயங்கள் சொல்லியிருக்கிறேன், இன்னும் பல விஷயங்கள் சொல்லப் போகிறேன்.
5–10 p.m. அவைகளையெல்லாம் அவர் கவனிப்பார் என்று நம்புகிறேன்.

